
www.tamilarangam.net

# எரிமலை



ஓகஸ்ட்-செப்டெம்பர் 1999

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழீழ மக்களின் விடிவிற்காக பட்டினித்தீயில் தன்னைப்பற்றி எரிய வைத்து நீதி கேட்ட தியாகி திலீபனின் 12 ஆண்டுகளின் பின்னான பழைய நினைவுகள் இன்றும் உயிர்த்துடிப்புள்ள சோக நிகழ்வாக எம் நெஞ்சில் இருக்கிறது. அந்த நாட்களின் நினைவுகள் உலகை உலுப்புகின்றன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...



மாங்குளம் சந்திப்பு

பக்கம்– 04



அழிப்பும் அழிவும்
ஐந்தாண்டுச் சாதனை

பக்கம்– 12




யாழ்ப்பாணத்தில் நிலைமை...

பக்கம்– 16


★ திலீபனின் நினைவுடன் ........ பக்கம் – 20

★ எழுச்சிப் பேரணி - சுவிஸ் ........ பக்கம் – 26

★ மாங்குளம் பாதை - சிறீலங்கா விதித்த நிபந்தனை ........ பக்கம் – 28

★ மரபலகு - அறிவியற் கட்டுரை ........ பக்கம் – 32

★ சிறுகதை ........ பக்கம் – 36

★ சிறுகதை ........ பக்கம் – 46




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்பு உண்டு. ஒரு தேசிய நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத் தேசிய இனமுமே பகிர்ந்துகொள்ள வேண்டும். இந்தத் தேசியச் சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது, நாம் எமது தேசத்திற்குப் புரியும் துரோகம் என்றே சொல்லவேண்டும்

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பதினெட்டாம் ஆண்டு
ஓகஸ்ட் - செப்டெம்பர்
1999

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*Tel: 01 - 43 58 11 42*

# இணக்கம்

**க**ல்லோயா நீர்ப்பாசனத் திட்டம் பேரினவாதத்தின் திட்டமிடப்பட்ட இனவாத திட்டமாகும். தமிழர் தாயகத்தினை சிங்கள குடியேற்ற திட்டங்களால் சிதைத்து தமிழர் தேசியம் பற்றிய கோட்பாட்டை புறந்தள்ளும் சாதுரியமான உள்நோக்குடன் சேனநாயக்காவால் ஐம்பது வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இவ் திட்டமானது இன்று அம்பாறை மாவட்டத்தை சிங்கள பிரதேசமாக பெயர்சூட்டும் எல்லைவரை விஸ்தீரணம் பெற்றுள்ளது. இக் கொடிய திட்டத்தை பசுமைப் புரட்சிக்கான உயரிய திட்டம் என வர்ணித்து இன்றைய சிங்களத் தலைமை பொன்விழா கொண்டாடுகின்றது. சந்திரிகாவின் அரசும் எதிர்க்கட்சிகளும் இவ் பொன்விழா மேடையில் சிங்கள குடியேற்றத்திட்டத்தின் வெற்றி என்ற உட்கிடக்கையுடன் கொண்டாடுகின்றனர். ஆனால் அமைதிவழி இணக்கம் பற்றியும் கொழும்பில் கூக்குரல் எழுப்பப்படுகின்றன.

இவ் இரட்டை முகம் கொண்ட நாசகார - தமிழர் விரோத அரசுகளுடன் பேசி தமிழர்களால் இணக்கப்பாட்டைக் காணமுடியுமா?

போரும், அது ஏற்படுத்திய தாக்கங்களும், பண்பாட்டுச் சிதைவுகளும் இன்றுவரை சிங்களத்தின் இனவாத சிந்தனைகளை சிதைக்கவில்லை. மாறாக தமிழர்களின் ஆயுத பலத்தை சிதைப்பதற்கான மார்க்கங்களாகவே அமைதிவழி இணக்கம் பற்றிய பேச்சுக்கள் இருந்து வருகின்றன. இவ் அமைப்பை ஆழமாகக் கணித்தவர் எமது தேசியத் தலைவர் ஆவார். இச் சிங்கள இரட்டை வேடத்தை கணித்து தமிழர்களின் பலத்தை அதிகரித்து அதன் மூலமே நீதியான தீர்வை வெற்றி கொள்ள முடியும் என்ற தலைவரின் கணிப்பை கல்லோயாக் கொண்டாட்டங்கள் சரியென நிரூபிக்கின்றன.

இவ் வரலாற்றுத் தொடர்ச்சியைக் கிரகிக்காது இணக்கம் பற்றி மேற்குலகும் அதன் ஆதரவு பெற்ற அமைப்புக்களும் கருத்துக்களை வெளியிடுவது சிங்கள இனவெறி அமைப்பை பலப்படுத்தும் செயற்பாடாகும். நீதியான தீர்வு பற்றிய கரிசனை அமைதி வழித் தீர்வு பற்றி விபரிக்கும் சக்திகளுக்கு இருக்குமாயின் அவர்கள் சிங்கள இனவாத அமைப்பின் வடிவத்தை சரித்திர அறிவுடன் கிரகிக்க வேண்டும். சிங்களத்தைப் பற்றிப் பிடித்துள்ள இனவாத பண்பாட்டு அடித்தளம் பற்றிய அறிவைக் கொண்டவர்களே தமிழர்களின் அரசியல் இராணுவ சர்வதேச நிலைப்பாட்டின் தார்மீக நியாயத்தை புரிந்து கொள்வர்.

மாறாக, வெறுமனே தத்தமது அரசியல், புவியியல், இராணுவ சர்வதேச நாடுகள் அமைதி இணக்கம் பற்றி வரலாற்று தொடர்ச்சியற்ற கோட்பாடுகளை திட்டமிடுவது தீவின் இருதேச இனங்களையும் நீண்ட கொடிய போருக்குள் தள்ளும் முயற்சியாகிவிடும்.

தமிழர்கள் உலக சமூகத்திடம் நீண்ட காலமாக கேட்பது தமது தேசிய சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஜனநாயக தேர்வை அங்கீகரிக்க வேண்டும் என்பதேயாகும். இணக்கம் என்பதற்கு வெறும் புறத்தோற்றங்கள் தேவைப்படவில்லை. அகத்தே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அவை பூர்த்தி செய்கின்றது என்பதே தேவை. இதனை மறுத்து வெறுமனே சந்திரிகாவை தூக்கி நிறுத்தும் இணக்கத் திட்டங்களை ஆதரிப்பது தமிழர்களுக்கு சர்வதேச சமூகம் செய்யும் அநீதியாகும். இதற்கு கல்லோய கொண்டாட்டங்கள் ஆதாரங்களே எனலாம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாங்குளம் சந்திப்பு



**உணவை உரிமையாகப் பார்த்த மக்களுக்கும் உணவை ஆயுதமாக்க முற்பட்ட சிங்களத்திற்கும் இடையேயான போர்**

சிறீலங்காவுக்கும் தமிழீழத்திற்குமிடையேயான போரின் மற்றுமொரு இராணுவ அரசியல் இராஜதந்திரப் பரிமாணத்தை புலிகளுக்கும் சிங்கள இராணுவ அரச நிர்வாகத்திற்கும் இடையில் ஆகஸ்டில் இடம்பெற்ற மாங்குளம் சந்திப்பு ஏற்படுத்தியது.

சிங்களத்தின் கொடூரமும் நுட்பமும் நிறைந்த இன்றைய தலைமை உணவை தமிழ் மக்களுக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்தி வன்னிப் போர்முனையில் அரசியல் இராணுவ இராஜதந்திர வெற்றிகளைப் பெற முயன்ற போது எமது தேசிய தலைமை அவ் மும்முனை முயற்சிகளையும் முறியடித்த நிகழ்வாக மாங்குளம் சந்திப்பு திகழ்ந்தது.

வன்னிப் போர் முனைகளே இன்று இரு தேசங்களுக்கும் இடையேயான



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








**புலிகளின் அரசியல் இராணுவ நிலைப்பாட்டை முன்னெடுத்து மக்களின் எழுச்சி வெடிக்க ஆரம்பித்தது. அரச பணிமனைகள் மீதான முற்றுகை இறுக்கப்பட்டது. சர்வதேச நிறுவனங்கள் முன் மக்களின் கோபக்குரல் எழுச்சி கண்டது. சிங்களத்திற்கும் தமிழீழத்தின் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்குமான இறுதித் தொடர்பாகத் திகழும் அரச பணிமனைகளை மூடிவிட மக்கள் தயாராகினர்.**

பிரதான களமாக உருக்கொண்டுள்ளது. தமிழீழத்திற்கான மரபுப் படையணிகளை கட்டி எழுப்பிவரும் வன்னி சிங்கள தேசத்தின் அரசியல் இராணுவ பொருளாதார இராஜதந்திர பலத்தை சிதைத்து அழிக்கும் பெரும் புயல் எழும் பிரதேசமாக எழுந்துள்ளது.

சந்திரிகாவின் நவபேரினவாத தலைமைத்துவத்தின் எழுச்சி தமிழர்களின் விடுதலை எழுச்சிக்கு முடிவு கட்டும் என்ற பெரும் கணிப்புடன் சிங்களம் வகுத்த பெரும் போர்த் திட்டம் அகப்பட்டுக் கிடக்கும் பிரதேசமாக வன்னி உள்ளது. இராணுவச் செலவீனத்தை இரட்டிப்பாக்கி ஆட்பலத்தை அதிகரித்து புலிகளின் பிரதான ஆளுமைப் பிரதேசங்களை மீட்பதன் மூலம் தமிழர்களின் சுதந்திர எழுச்சியை நசுக்கிவிடலாம் என்ற கணிப்பே பிரதான இராணுவக் கோட்பாடாக கணிக்கப்பட்டு யாழ்குடாவில் புலிகளை முடிவான சண்டைக்கு அழைத்தவர்களை வன்னிக்கு இழுத்துச் சிதைக்கும் இராணுவ பரிணாமத்தினை தேசிய தலைவர் பிரபாகரன் இன்று நிரூபித்துவரும் வேளையில் போரினை வெல்ல சர்வதேச சட்டங்களுக்கு முரணாக உணவையும் மருந்துப் பொருட்களையும் பிரயோகிக்கும் கொடூரம் சந்திரிகா அரசால் தீவிரப்படுத்தப்பட்டது.

இவ் தடைகளை இராணுவக் காரணங்களைக்காட்டி மெல்ல மெல்ல தீவிரப்படுத்தி வந்த சிங்கள அரசு அண்மைக்காலமாக இதனை உச்ச நிலைக்கு கொண்டு செல்ல முற்பட்டது. இது சிங்கள இராணுவப் போர் இயந்திரத்தின் அத்தியாவசிய தேவையாகிய போதும் சந்திரிகாவின் மற்றைய பக்கமாகிய சர்வதேச பரப்புரைகளுக்கான இயந்திரம் இவ் கொடூரங்கள் நுட்பமாக அமுலாவதையே விரும்பின. போர்முனைக் காரணங்கள் இவ் பரப்புரையாளர்களுக்கு வசதியானவை. மக்களுக்கு எதிரான கொடூரத்தை போர்முனைக் காரணங்களின் அழுத்தத்தில் மறைக்கும் அதேவேளையில் மக்களை பணிய வைக்கும் அரசியல் குயுக்தியும் இங்கே அமுலாகின. இவ் இராணுவத் தேவைகளுக்கும் அரசியல் இராஜதந்திரத் தேவைகளுக்கும் இடையேயான சமரசமே இவ்வாண்டு மே 26 முதல் வன்னிக்கு பூரணமாக அமுலாக்கப்பட்ட உணவுத் தடையாகும்.

ரணகோச இராணுவ நடவடிக்கையின் காரணங்களைக் காட்டி இதுவரை உணவுக்கான பாதையாக இருந்த உயிலங்குளத்தை 1999 மே 26–ல் இராணுவம் மூடியது. வன்னிக்கான சிங்களத் தளபதியாக செயற்படும் மேஜர் ஜெனரல் பலகெல இவ் உலக உடன்பாடுகளுக்கு விரோதமான போர் குற்றத்தை தொடர விரும்பினார். இதனைத் தொடர்வதன் மூலம் புலிகளினையும் மக்களையும் பட்டினி போடலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் பெரும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு இவர் திட்டமிட்டார். இதே வேளையில் வன்னியில் இடம்பெறும் போர் எழுச்சியும் பெரும் இராணுவ பயிற்சிகளும் சிங்கள இராணுவத்தை அச்சுறுத்தின. புலிகள் கட்டி எழுப்பி வரும் மரபுப் படையணிகள் வன்னியில் அகலக்கால் வைத்து பிரிந்து கிடக்கும் பல்லாயிரம் இராணுவத்தை விழுங்கிவிடும் என்ற பொது ஊகம் மேஜர் ஜெனரல் பலகெலவை தற்காப்பு நிலைக்கு தள்ளியது. இவ் அச்சம் மற்றும் போர் உத்திகளின் வெளிப்பாடாக உணவையும் மருந்துகளையும் பூரணமாகத் தடுப்பதன் மூலம் தமிழர்களினை தற்காப்பு நிலைக்கு தள்ளலாம் என இராணுவம் கணித்தது. இவ் நடவடிக்கை சிங்கள இன வெறியின் மற்றுமொரு கோர முகத்தை நிரூபித்தது. சிங்கள அமைப்பின் இனப்படுகொலை திட்டத்திற்கு இவ் இராணுவ திட்டம் ஏற்புடையதால் வன்னி மீதான தடை அமுலாகத் தொடங்கியது. இத் தடையினால் எழும் சர்வதேசப் பாதிப்புக்களை எதிர்கொள்ளத்தக்க ஒரு சுதந்திரத்தை சிங்களம் தேடியது. இதுவே உணவுத் தடையை உத்தியோகபூர்வமாக அறிவிக்காது தடையை நீக்குவதற்கான நடவடிக்கைகளை தொடர்வது போன்று பாசாங்கு செய்வதாகும்.



வன்னியில் இவ் நடவடிக்கைகளுக்கு எதிரான மக்கள் எழுச்சி தீவிரமாகியது. திட்டமிடப்பட்ட முறையில் இடம்பெற்ற உணவு விநியோக கட்டுப்பாடுகளுக்கு எதிராக தொடர்ந்து பல மாதங்களாகப் போராடிய மக்கள் இவ் முழுமையான தடை கண்டு பொங்கி எழுந்து உலக சமூகத்தை செயற்படத் தூண்டினர். சர்வதேச உள்நாட்டு நிறுவனங்கள் உணவுத் தடையின் ஆபத்துப்பற்றி அறிவிப்பு செய்ய ஆரம்பித்தன.

இவ் மக்கள் எழுச்சியையும் உலக சமூகத்தின் கரிசனையையும் திசைதிருப்பும் இராஜதந்திர அரசியல் வித்தைகள் கொழும்பிலும் வவுனியாவிலும் அரசாலும் இராணுவத்தாலும் ஒளிப்பதிவு நாடாக்களின் முன் ஆரம்பமாகின.

வன்னிக்கான உணவுப் பாதையை திறப்பதற்கு தனது இராணுவம் தயாராக இருப்பதாக சந்திரிகா பாசாங்கு செய்தார். அவரது தளபதி பலகெல தனது போலிக் கரிசனையை வெளிக்காட்ட அறிக்கைகளை வெளியிட்டார்.

வன்னிக்கு உணவு விநியோகம் செய்வதற்கும் மக்கள் போக்குவரத்துக்கும் பாதை தேவை எனவும் இதற்காக ஒரு இராணுவமற்ற வலயமொன்றை உருவாக்க வேண்டும் எனவும் வாய் ஓயாது கூறிய தளபதிகள் இவ் பாதுகாப்பு வலயத்தை அமைக்க புலிகள் 5 கி.மீ பின்னோக்கி நகரவேண்டும் என அறிக்கை விடுத்தார். சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஊடாக விடுக்கப்பட்ட இவ் வேண்டுகோளை புலிகள் நிராகரித்தனர். வன்னியில் ஓரங்குல நிலத்தைப் பிடிப்பதற்கும் துருப்பினரை இழுக்கும் சிங்களப் படைக்கு 5 கி.மீ தாரைவார்த்துக் கொடுக்குமாறு பலகெல கேட்டமை சிங்களத்தின் அரசியல் இராணுவ பரப்புரை பொறி மனிதாபிமான தேவைகளைக் கூட உத்தியாக பாவிக்க முற்பட்டதை புலிகள் தீர்க்கமாக நிராகரித்தனர்.

புலிகளின் இவ் நிராகரிப்பு சிங்களத்தின் வெளிவிவகார அமைச்சு, ஜனாதிபதி பணிமனை, இராணுவ அமைச்சு என்பனவற்றின் நிபுணர்கள் வழிகாட்ட வவுனியாவுக்கான இராணுவத் தளபதியால் அமுல்படுத்தப்பட்ட திட்டங்களின் முன் தெளிவாக வைக்கப்பட்ட அறிவிப்பானது. புலிகள் எதுவித குழப்பங்களையும் வெளிக்காட்டவில்லை. எதுவித பாசாங்குகளுக்கும் இடம் கொடுக்கவில்லை.

புலிகளின் அரசியல் இராணுவ நிலைப்பாட்டை முன்னெடுத்து மக்களின் எழுச்சி வெடிக்க ஆரம்பித்தது. அரச பணிமனைகள் மீதான முற்றுகை இறுக்கப்பட்டது. சர்வதேச நிறுவனங்கள் முன் மக்களின் கோபக்குரல் எழுச்சி கண்டது. சிங்களத்திற்கும் தமிழீழத்தின் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்குமான இறுதித் தொடர்பாகத் திகழும் அரச பணிமனைகளை மூடிவிட மக்கள் தயாராகினர். இது தனித்து ஒரு மனிதாபிமான சிக்கல் என்ற

**புலிகள் தமிழர்களின் நிகழ்ச்சித் திட்டத்தை மட்டுமே பேச்சுக்களுக்கான மேடையிலும் போர் முனையிலும் முன்நிறுத்துவர். சிங்களம் வகுக்கும் வலைகளில் வீழ்வதற்கு புலிகள் தயாரில்லை என்பதுடன் எழுச்சி கொண்ட மக்களை அச்சுறுத்தல்களோ தடைகளோ எதுவுமே தோற்கடிக்க முடியாது என்பதே மாங்குளம் கூறும் செய்தியாகும்.**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லையைக் கடந்து அரசியல் செய்தி என்ற வடிவத்தை நோக்கி மக்கள் விடயத்தை எடுத்துச் சென்றனர். புகலிட நாடுகளில் தமிழ் மக்கள் எழுச்சி கொள்ள ஆரம்பித்தனர். இவ் மக்கள் எழுச்சி சிங்களத்தின் அரச அதிகாரம் பற்றிய கேள்வியை யும் தமிழர்களின் தேசிய சுயநிர்ணய உரிமை பற்றிய நிலைப்பாட்டையும் நோக்கியதாக எழுந்தது.

சர்வதேச சிக்கலான சூழ்நிலை களை அவதானித்த சந்திரிகா ஆழ்ந்த மௌனத்தை கடைப்பிடித்தவாறு தன் தளபதிகளையும் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரையும் முடுக்கி விட்டார். கொழும்பில் இவர்கள் வெளிநாட்டு தூதர்களை சந்தித்து உணவு நிலவரத்திற்கு புலிகள் தான் காரணம் என பரப்புரை செய்தனர். தமிழ் மக்களிடம் புலிகளே இவ் நிலைக்குக் காரணம் எனச் சொல் லப்பட்டது. புலிகளிற்கு மாறிமாறி செய்திகளை அனுப்புவதாக பாசாங்கு பண்ணியவாறு புலிகள் காலத்தைக் கடத்துகின்றார்கள் எனச் சொல்லப் பட்டது. இவை அனைத்திற்கும் பின் னணியாக ஒரு எச்சரிக்கை மக்களுக் குத் தரப்பட்டது. உணவைத் தடுத்து அழிப்போம் என்ற கொடூரமான செய்தி தரப்பட்டது. இதே காலப் பகுதியில் கொக்கிளாயில் தமிழர் களின் நிலங்களில் அத்துமீறிக் குடி யேறிய சில நூறு சிங்களவர்கள் புலி களுக்கு அஞ்சி வெளியேறியபோது சிங்கள அமைச்சர்களும் பௌத்த பிக்குகளும் இராணுவத்தளபதிகளும் உணவும் உடைகளும் வழங்கி உதவ கொழும்பின் ஆங்கில சிங்கள பத் திரிகைகள் விவரணக் கட்டுரைகள் வெளியிட்டன.

வன்னியில் உணவை ஆயுதமாகப் பிரயோகிக்கும் அரசின் வலையில் வீழ்வதில்லை என்பதில் புலிகள் உறுதியைக் காட்டினர். உணவை மக்களின் உரிமையாக பார்க்கும் அர சியல் தீர்மானத்தை புலிகள் வெளிப் படுத்தினர். இவ் உரிமையைப் பறிக்க முயலும் கொடூர சக்திகளிடம் சரண டைவதில்லை எனப் புலிகள் உறுதி யாக இருக்க விழிப்படைந்து எழுச்சி பெற்ற மக்கள் இதன் மனிதாபிமான பக்கத்துடன் அரசியல் பக்கத்தையும் வலியுறுத்திய போது தமது திட்டங் கள் எதிர் திசையில் செல்வதை சிங் களம் கணிக்கத் தொடங்கியது. சந் திரிகாவும் கதிர்காமரும் தளபதிக ளும் விடயத்தை முடிவுக்கு கொண்டு வரும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இறுதியில் புலிகளும் இராணுவ மும் மாங்குளத்தில் 250 மீற்றர் நீள முள்ள பாதையை திறந்தனர். இதற் கான சந்திப்பு மாங்குளத்தில் ஆக் கிரமிக்கப்பட்ட ஆக்கிரமிக்கப்படாத பிரதேச எல்லைகளில் இடம்பெற்ற போது சிங்களம் தன் அரசியல் இராணுவ இராஜதந்திர தோல்வியி னைக் கண்டது.

புலிகளை அழிப்பதை நோக்கமா கக் கொண்ட இராணுவமும் புலி களை பயங்கரவாதிகள் என்றும் வன்னிக்குள் புகுந்து தமது இராணு வம் மக்களுக்கு உணவு கொடுக்கும் என அறிவித்த வெளிவிவகார அமைச் சும் அமைதியாக பின்கதிரையில் இருந்து உணவுத் தடைக்கு உழைத்த ஜனாதிபதி பணிமனையும் மாங்கு ளத்தில் புலிகளைச் சந்தித்து புலிக ளின் நிகழ்சித் திட்டத்தின் கீழ் பேச நிர்ப்பந்திக்கப்பட்டது.

புலிகள் தமிழர்களின் நிகழ்ச்சித் திட்டத்தை மட்டுமே பேச்சுக்களுக் கான மேடையிலும் போர் முனையி லும் முன்நிறுத்துவர். சிங்களம் வகுக் கும் வலைகளில் வீழ்வதற்கு புலிகள் தயாரில்லை என்பதுடன் எழுச்சி கொண்ட மக்களை அச்சுறுத்தல் களோ தடைகளோ எதுவுமே தோற் கடிக்க முடியாது என்பதே மாங் குளம் கூறும் செய்தியாகும்.

வன்னியில் முழுமையான தடையை அமுல்படுத்த முடியாவிட்டாலும் உணவுக் கையிருப்பை குறைத்ததன் மூலம் தந்திரோபாய வெற்றியை பெற்றுவிட்டதாக இராணுவமும் அரசும் இரகசியமாக கொண்டாடி னும் தமிழீழம் உருவாகுவதை இத் தடைகளும் இரகசிய திட்டங்களும் துரிதப்படுத்தும்.

**நாதன்**



சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகின்றது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலக் குரல்

கே.பி.றெஜி

# காலமும் கடமையும் இணைகின்றன

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழீழம் மலரட்டும்" என்ற தியாகி திலீபனின் கனவு இன்று நனவாக உருவெடுத்துள்ளது. காலச்சக்கரத்தின் கரங்களும் கடமை உணர்வுள்ள கரங்களும் கைகுலுக்கிக் கொள்கின்றன. தேசம் விடுதலை பெறுவதற்கான தெம்புடன் சிலிர்த்து நிற்கிறது. உலகத் தமிழர்களின் பேரபிமானம் மிக்க வீரத் தலைவர் வே.பிரபாகரனின் தலைமையின் கீழ் அணி வகுப்போம் என்ற குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன.

'ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து எமது தேசத்தை மீட்டெடுப்போம்' என்ற உறுதியுடன் கால்கள் நடக்கின்றன. எமது போராட்டத்தை அடக்க முற்படும் ஆதிக்கவாதிகள் எமது போராட்டத்தை குறைத்து மதிப்பிட்டவர்கள், தமிழ் மக்களின் போர் எழுச்சியையும் இராணுவ வளர்ச்சியையும் தேசிய உறுதிப்பாட்டையும் பார்த்து சகிக்க முடியாதவர்கள் இன்று மக்களாகிய எங்களின் புதிய அத்தியாயத்தை நசுக்கவோ அல்லது விமர்சனம் செய்யவோ கூட முயன்று பார்க்கலாம்.

உணவு, மருந்து, எரிபொருள் தடைகளை இன்னும் இறுக்கலாம். எமது நிலங்களில் உற்பத்தியில் ஈடுபட கடலில் தொழில் செய்ய தடை விதித்து எம்மை பட்டினிச்சாவிற்கு இட்டு செல்லலாம். எனினும் மண்டியிடாது, உயிர்ப்பிச்சை கேட்காது கௌரவமான சுய பாதுகாப்பை நோக்கி வீறு நடை போடுவோம்.

பஞ்சம், பசி, பட்டினியால் வாட்டி, மருந்துப் பொருட்களை தடை செய்து, நோய் பிணிகளை உருவாக்கி மக்களாகிய எமக்கு மரண பயத்தை ஏற்படுத்தி எம்மை அடிமை கொள்ள நினைக்கும், எமது போராட்டத்தை நசுக்க நினைக்கும் சிங்கள அரசிற்கும் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து உழைக்கும் அனைவருக்கும் ஓர் வேண்டுதல். எரித்திரிய விடுதலைப் போராட்டத்தை இவர்கள் நன்றாக படித்துவிட்டு செயற்பட வேண்டும்.

எரித்திரியா ஓர் வளம் குறைந்த தேசம். ஆனால் அங்குள்ள மக்கள் உறுதியுடன் போராடினார்கள். சுதந்திர கோசத்தைக் கூட சொல்ல வலுவின்றி, சக்தி இன்றி, போன இடமெல்லாம் சுருண்டு விழுந்தனர் மக்களும் போராளிகளும். ஆனாலும் மரண பயத்திற்கு அஞ்சாது போராடினார்கள். அவர்களுக்கு மரணபயத்தைவிட தேசப்பற்றும் விடுதலைத் தாகமும் மேலோங்கி நின்றது. எமக்கு பஞ்ச நிலை வருவதற்கு எமது வளம் கொழிக்கும் பூமித்தாய் விடமாட்டாள்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவ்வாறு பஞ்ச நிலையினை சிங்கள அரசு தோற்றுவிக்குமேயானால் அதற்கும் பணிந்துவிடாது போராட்டம் இன்னும் முனைப்புப் பெறும் என்பது உண்மை.


குழந்தைகளுக்கான "போலியோ" சொட்டு மருந்தினை கூட ஒழுங்காக முறைப்படி உரிய காலத்திற்குள் அனுப்பாது தடுத்து, எதிர்காலத்தில் தமிழ் இனத்தை வலுவிழந்த ஒரு சமுதாயமாக ஆக்குவதன் மூலமாகவேனும் ஓரளவு போராட்டத்தை நசுக்கமுடியும் என்ற நீண்ட நோக்க கற்பனையில் செயற்படுகின்ற அரசிடம் எக்காலத்திலும் ஓர் அமைதியை எதிர்பார்க்க முடியாது என்பதே மக்களின் இறுதியான முடிவு. சந்திரிகா அம்மையாரின் சமாதானத்திற்கான பேச்சிலும் நம்பிக்கை இல்லை என்ற வகையில் நாங்களே போரினால் போரை முடிவுக்கு கொண்டு வருவோம் என்ற முடிவுக்கு மக்கள் வந்துள்ளனர். இந்நிலையில் தற்காப்பு இராணுவப் பயிற்சி பெறும் முதலாவது கட்ட நிலையில் ஏன் இதனைப் பெறவேண்டும் என்பதனை இவ்வாறு தான் விளங்கிக்கொள்கின்றோம்.



## அனைவரும் தற்காப்பு இராணுவப் பயிற்சி பெறவேண்டியதன் அவசியம் என்ன?

எந்தவோர் உயிரினமும் தனது உயிருக்கு ஆபத்து நெருங்குகின்ற வேளை தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக இறுதி முயற்சியை மேற்கொள்ளும். இதன்படி ஓர் உயிரினம் தனக்கு ஆபத்து வரும்வேளை, அதில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும் ஏதாவது ஓர் முறையே தற்காப்பு ஆகும். இது இயற்கையாகவோ அல்லது கற்றுக் கொள்வதன் மூலமாகவோ ஏற்படுகின்றது.

மனிதன் தனது அறிவாற்றலால் பல்வேறு தற்காப்பு வழிமுறைகளை, தான் தோன்றிய காலத்தில் இருந்து பின்பற்றி வருகின்றான். ஒரு மனிதன் தனக்கு வரப்போகின்ற ஆபத்தை அறிந்து எந்த வழியில் ஆபத்து வருகின்றதோ அதே வழியில் அல்லது மாற்று வழியில் அதனை எதிர்கொள்வதற்கு தயாராகி செயற்படுகின்றான். இன்றைய உலக அரங்கில் அரசிறைமை கொண்ட நாடாயினும் சரி அல்லது அதற்காக போராடும் தேசமாயினும் சரி சுய பாதுகாப்பு என்பதில் பிரதான கவனம் செலுத்துகின்றது. உதாரணமாக உலகிலேயே பெரிய ஜனநாயக நாடு என்ற என்ற பெருமை கொண்டதும் அகிம்சை நாடு எனப் பெயர் பெற்றதுமான இந்தியா, பொக்ரானில் ஐந்து அணுகுண்டை வெடிக்க



செய்ததுடன் நின்றுவிடாது மேலும் இராணுவ சாதனங்களை உற்பத்தி செய்வதற்காக தேசிய நிதியில் பெருமளவு நிதியையும் ஒதுக்கி வருகின்றது. இதனை இந்திய மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இதற்கு காரணம் இந்தியர் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் ஏற்பாட்டை செய்கிறார்கள் என்பதே அர்த்தமாகும். மேற்கூறப்பட்டது போன்று எந்தவோர் நாடும் / தேசமும் சுய பாதுகாப்பிலும் சுய பொருளாதாரத்திலும் தன்னை தயார்படுத்துவதற்கான ஏற்பாடுகளில் தீவிரமாக செயற்படுகின்றன. இத்தகைய நிலை ஒன்றிலிருந்து எமது தேசமும் அதனைப் பின்பற்றுவது தவிர்க்கமுடியாத வரலாற்றுக் கடமையாகும். அவுஸ்திரேலிய பழங்குடி மக்கள், செவ் இந்தியர், ஆபிரிக்க கறுப்பின பழங்குடி மக்கள் இன்னமும் தமது இனத்தின் தற்காப்பு முறைகளை பரம்பரை பரம்பரையாக கற்று வருகின்றனர்.

தமது வீர மரபைப் பேணுவதுடன் எக்காலத்திலும் தம்மைச் சூழும் ஆபத்தையும் எதிர்கொள்ளக்கூடிய உணர்வைப் பராமரிக்கவும் அவர்கள் இந்த முறையைத் தொடர்கின்றனர்.

பண்டைய எமது தமிழினமும் படைபலத்திலும் தற்காப்பு நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்கிய



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சுயநல வாழ்வுக்கான பாதுகாப்பு

- மரணபயம் மேலோங்கி நிற்கும். இதனால் மண்டியிட்டு வாழ்தல் பின்பற்றப்படும்.
- சுயநலன் மேலோங்கி நிற்கும். இதனால் சுற்றம், தேசம் ஆகியவற்றின் பாதுகாப்பை கருத்தில் எடுக்காது தான் வாழ்ந்தால் போதும் என்ற உணர்வு மேலிட்டிருக்கும்.
- தனது பாதுகாப்பில், தனது இனம், வரலாறு, தாயகம், மொழி என்பன புறக்கணிக்கப்பட்டிருக்கும்.
- சுதந்திரம், சமாதானம் அமைதி என்பதனை தவறாகப் புரிந்து கொண்டு இதுதான் பாதுகாப்பு என அதனைப் பின்பற்றி வாழுதல்.
- அற்ப ஆசைகளையும் தற்காலிக சந்தோசத்தையும் மூலதனமாகக் கொண்டு எதிர்கால அரசியல் எண்ணக்கருவை சிந்தியாது குறுகிய தோர் வட்டத்துள் வாழ்தல்.

## கௌரவமான, தனித்துவமான வாழ்வுக்குரிய பாதுகாப்பு

- தன்மானம், தனித்துவம் என்பவற்றை எந்த விலைக்கும் கொடுக்காது, எந்த சலுகைக்கும் விட்டுக் கொடுக்காது வாழ்தல்.
- தனிப்பட்ட நலனிற்காக, தன்னை மையப்படுத்திய பாதுகாப்பிற்காக தனது தேசத்தினை, தனது இனத்தினை மறந்து, செயற்படாது இருத்தல்.
- தனது தேசத்தின் பாதுகாப்பையும் தனது பாதுகாப்பையும் சரிவர எண்ணிச் செயற்படுதல்.
- மரண பயத்தை விட, சுயநலத்தைவிட, தேசபக்தியும் அதனது பாதுகாப்பும் மேலோங்கி நிற்கும்.
- தனது பாதுகாப்பு என்பது தனது தாயகத்தின் பாதுகாப்பிலேயே தங்கியுள்ளது என்ற உணர்வுடனும் சுயபலத்திலும் சொந்த படைபலத்திலும் தங்கியுள்ளது என்ற தெளிவுடனும் தனது பாதுகாப்பை பின்பற்றுதல்.
- எதிரிக்கு அடிபணிவதன் மூலமான உயிர் பாதுகாப்பை ஒருபோதும் விரும்பாதிருத்தல்.

தால்தான் தலைநிமிர்ந்து வாழ்ந்து தமிழையும் தமிழ்ப்பண்பாட்டையும் பேணி வளர்க்க முடிந்தது. காலப் போக்கில் ஏற்பட்ட வீழ்ச்சிகளால் அண்டி வாழுதல், கெஞ்சி வாழுதல், அடிபணிந்து வாழுதல் என்று அடிமை வாழ்வைப் பின்பற்றினர். இவை சுயநலத்துடன் வாழ்வதற்கான ஒரு வகைப் பாதுகாப்பேயெனக் கொள்ள முடியும். இத்தகைய இரவல் பாதுகாப்பு முறைகளைக் கொண்டு சுயநல சிகரத்தில் ஏறுவதற்காக எம்மையும், எமது தாயகத்தையும் தாரை வார்த்துக் கொடுத்து மேற்கத்தைய சீமான்களின் வழியைப் பின்பற்றினோம்.

மேறகூறப்பட்ட வகைப்படுத்தவின் கீழ் சுயநல வாழ்வுக்கான பாதுகாப்பிலிருந்து மக்கள் கௌரவமான வாழ்வுக்கான பாதுகாப்பைத் தேடி அதனைப் பெற அனைவரும் விரும்புகின்றனர். இதற்கு இட்டுச் செல்வது தான் தற்காப்பு இராணுவப் பயிற்சியாகும்.

தமிழ் மக்களாகிய எமக்கு ஆபத்தானது, ஆயுதம் தரித்த ஆக்கிரமிப்பு அரசின் படைகளால் சூழப்பட்டுள்ளது. இதனால் மரணபயம் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் எமது அன்றாட வாழ்விலும் ஒவ்வொரு கணமும் அச்சுறுத்தல் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

மரண பயத்தினை ஏற்படுத்தல் மூலம் எம்மை அடிமைப்படுத்தி தாமே எமது பாதுகாப்புக் காவலர் எனக் காண்பித்து ஓர் போலிப் பாதுகாப்பை வழங்க நினைக்கின்றது சிங்கள அரசு. இதனைத் தூக்கி எறிந்து நாம் எமது பலத்தினாலான பாதுகாப்பிலே வாழுவோம் என்று உறுதி எடுத்துக்கொண்டதனால் நாம் இன்று சில நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றது. அதில் இருந்து எம்மை பாதுகாக்கவே தற்காப்பு பயிற்சி பெறுகின்றோம். இதன் மூலம் நாம் பெறுகின்ற அனுகூலங்கள் எவை?

இராணுவ அறிவையும் பாதுகாப்புத் தொடர்பால் தந்திரோபாய வழிமுறைகளையும் கற்றுக் கொள்வதன் மூலம் எதிரியின் பல்வேறு வகையிலான அச்சுறுத்தல்களை இலகுவாக புரிந்து கொண்டு செயற்படமுடியும்.

"வல்லன வாழும் அல்லன அழியும் அல்லது அடங்கி வாழும்" என்பது இயற்கையின் நியதி. எனவே நாங்கள் வல்லவர்களாக இருக்கவேண்டும். இன்றைய சூழலில் அதற்கேற்ப நாம் வல்லமை பொருந்தியவர்களாக இருக்கவேண்டுமானால் இராணுவ பயிற்சி பெற்றவர்களாகவே இருக்க வேண்டும். பழைய தற்காப்பு முறைகள் எமக்கு இன்றைய சூழ்நிலையில் தகுந்த பாதுகாப்பை தரமாட்டாது. ஒரு புறம் நாம் தாக்குதலை செய்து பாதுகாத்து கொள்வதுடன் இன்னொரு புறம் தாக்குதல்களில் இருந்து தப்பித்துக் கொள்வதும் முக்கியமாகும். தற்காப்பு இராணுவப் பயிற்சியில் எதிரியின் தாக்குதலில் இருந்து எவ்வாறு எமது உயிர், உடல்களை பாதுகாத்து கொள்வது என்பதே மேலோங்கி நிற்கிறது.

அதனைப் பெற அனைவரும் விரும்புகின்றனர். இதற்கு இட்டுச் செல்வதுதான் தற்காப்பு இராணுவப் பயிற்சி ஆகும்.

நேரடியாக எமது உடல், உயிர் ஆகியவற்றுக்கு எதிரிப்படைகளால் ஏற்படும் ஊறுகளுக்கு நாங்கள் இடம் கொடாது அதனை தடுத்து நிறுத்த முடியும் அல்லது திருப்பித் தாக்கமுடியும். அதாவது எதிரி, தான் விரும்பியவாறு அல்லது இலகுவாக எம்மை கொல்ல முடியாது என்ற



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலைமையினை எதிரிக்கு புரிய வைக்கும் செயலில் ஈடுபடலிற்கு இப் பயிற்சி அவசியமாகின்றது.

வெடிமருந்துகள், விமான குண்டு வீச்சுகள், பாதுகாப்பு அரண்கள் ஆகியன பற்றி தெரிதல் மூலம் அநியாய மான உயிரிழப்புக்களையும் உடற் சிதைவுகளையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

உதாரணம்:

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிசோலைக்கு சென்று கொண்டிருந்த தமிழ் பயணி கள் பேரூந்தில் சிங்களப் படை சோதனை என்ற பெயரில் மக்களை இறக்கிவிட்டு வெடிகுண்டை பொருத் திய பின்பு மக்களை ஏறிச் செல்லும் படி பணித்தது. பஸ் கொக்கட்டிச் சோலையினை அண்மித்தபோது குண்டை கண்ட மக்கள் இறங்கி ஓடினர். இதனை அகற்ற விடுதலைப் புலிகள் செயற்படவேண்டிய நிலை ஏற்பட்டது. நாம் அனைவரும் அந்த அறிவை பெற்றிருந்தால் எதுவித பயப்பீதியும் இன்றி செயற்படுவ துடன் ஆபத்துக்களையும் நீக்க முடியும். இவ்வாறுதான் விமானக் குண்டு வீச்சுக்கள், எதிரிப்படையின் சரமாரியான துப்பாக்கி சூடுகள், கடலில் இருந்தான பீரங்கி தாக்கு தல்கள், எறிகணை வீச்சுகள் ஆகியன பற்றி எமக்கு போதிய அறிவு இருந் தால் உயிரிழப்புக்களை தவிர்க்க முடியும். 50 நாட்களிற்கு மேலாக கொசோவோ பிரதேசத்தில் நேட்டோ (NATO) படைகள் மிகப்பெரிய விமானத் தாக்குதலை மேற்கொள்கின்றது. ஆனால் வீசிய குண்டுகளின் எண்ணிக் கையில் நூற்றுக்கும் ஐந்து வீதம் என மக்கள் கூட கொல்லப்படாதது அவர்களின் தற்காப்பு தொடர்பான அறிவாற்றலையே வெளிப்படுத்து கின்றது எனலாம். எனவேதான் பாதுகாப்பு தொடர்பான போதிய அறிவைப் பெற தற்காப்பு இராணுவ பயிற்சி மக்களாகிய எமக்கு அவசிய மாகின்றது.

* உடல் ரீதியாகவும், உளரீதியாக வும் உறுதியான மனிதர்களாக எம்மை ஆக்கிக்கொள்வதற்கும் எமது சொந் தக் காலில் நாமே நிற்பதற்கும் இவ் வாறான பயிற்சிகள் ஊக்கு சக்தியாக அமைகின்றன. கடந்த காலங்களி லும் சரி, நிகழ் காலத்திலும் சரி, உலகத்தினால் மதிக்கப்படுகின்ற, தனிமனிதனோ, அல்லது ஓர் இனமோ, அல்லது தேசமோ, அது போராட்ட உணர்வுள்ளதாகவும் அடிபணியாத தன்மை கொண்டதாகவும் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. உதாரண மாக யூத இனத்தை குறிப்பிட முடியும்.

* ஒவ்வொரு தமிழ்க் குடிமக்களுக் கும் ஆபத்து சூழ்ந்திருக்கின்றது அல்லவா!

எமது விடுதலைப் போராட்ட உணர்வை அழிக்க வேண்டுமென்றும் எமது இனத்தின் அடையாளங்கள், தனித்துவங்களை ஒழிக்கவேண்டும் என்றும் திட்டமிட்டு ஒவ்வொரு தமிழ் மகனையும் அழித்து, அடிமைப் படுத்த எதிரி செயற்பட்டுக்கொண்டி ருக்கின்றான். இதன்படி உயிர்பறிப்பு மூலம் மரணபயத்தையும் வாழ்வா தாரங்களை அழிப்பதன் மூலம் போராட்டத்தில் நம்பிக்கையீனத் தையும் ஏற்படுத்த சிங்கள அரசு திட்டமிட்டு செயற்படுகின்றது. இதில் இருந்து எம்மைப் பாதுகாக்க எமக்கு தற்காப்பு இராணுவ பயிற்சி அவசிய மாகிறது.

* எமது தாயகத்தை ஆபத்து சூழ்ந் திருக்கின்றது அல்லவா!

சிங்கள பேரினவாத அரசு எமது தாயகத்தை மறுப்பது மட்டுமன்றி அதனை ஆக்கிரமித்து பின் அபகரித்து சிங்கள மக்களிற்கு பகிர்ந்தளித்து எமது தாயகத்தை சிங்கள பௌத்த பூமி ஆக்குவதே அதன் திட்டம். இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே எதிரியின் திட் டத்தை முறியடித்து எமது தாய கத்தை சூழ்ந்துள்ள ஆபத்தை எதிர்கொள்ள எமக்கு தற்காப்பு இராணுவப் பயிற்சி அவசியம்.

இதோ ஓர் சிறிய விளக்கம்:- குடாநாட்டை ஆக்கிரமித்துள்ள படைகள் ஏறக்குறைய முப்பதாயிரம், அங்கு வாழும் மக்கள் ஆறு (06) இலட்சத்திற்கும் மேல். இந்த ஆறு இலட்சம் மக்களும் தற்காப்பு இராணுவ பயிற்சி பெற்றவர்களாக இருந்தால் சிங்கள இராணுவம் விரும்பியவாறு செயற்பட முடியாது அல்லவா.

நிறைவாக, சுதந்திர தாகமும் விடு தலை வேட்கையும் கொண்ட மனிதர் களுக்கு சாதி, மதம், வயது, பால் போன்ற வேறுபாடுகள் தகைமை களாக வேண்டியதில்லை என்பதே வரலாறு. இதனை மக்களாகிய நாம் புரிந்துகொண்டு செயற்பட துணிந்தது உலக விடுதலைப் போராட்ட வர லாறுகளை மீண்டும் ஒருமுறை மெய்ப் பிப்பதாக அமைகின்றது.

பறிக்கப்பட்ட எமது சுய நிர்ணய உரிமை தரப்படவேண்டும் அல்லது பெறப்படவேண்டும். முதலாவது நடவடிக்கை சாத்தியப்படவில்லை என்பதனாலேயே இரண்டாவது நடவடிக்கைக்கு மக்களும் ஒன்று சேர்ந்து முழுமையாக செயற்பட துணிந்துவிட்டனர் என்பதனை அடக்குமுறையாளர் புரிந்து கொள்ளல் சிறந்தது.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அழிப்பும் அழிவுமே

# ஐந்தாண்டுச் சாதனை

**ஐந்தாண்டு காலத்தை ஆபத்தில்லாமல் ஓட்டியதைத் தவிர சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசு ஐந்தாண்டுச் சாதனையாக எதை விண்டுரைக்கமுடியும்?**

சந்தரிகா அரசின் ஐந்தாண்டுச் சாதனை என்ற கேள்வி வரும் போது, இப்படித்தான் பொதுவாக எல்லோரும் சிந்திக்கத் தலைப்படுவர்.

ஆனால் ஐந்தாண்டுகாலம் ஆட்சியில் இருந்து சாதனைகள் படைத்து விட்டதாக, கொழும்பில் பாரிய ஊர்வலம் ஒன்றை சந்திரிகா அரசு நடத்தி முடித்திருக்கின்றது. என்றுமில்லாதவகையில் பெரும் எடுப்புடன் மேற்கொள்ளப்பட்ட இந்த ஐந்தாண்டுகால சாதனை ஊர்வலம், பொதுக்கூட்டத்திற்கென, நாட்டின் பல பகுதிகளில் இருந்தெல்லாம் பொதுமக்கள் அரசாங்கச் செலவில் அள்ளிவரப்பட்டனர்.

1994–ம் ஆண்டு பொதுத் தேர்தலில் நின்றபோதும், தேர்தலில் வெற்றிபெற்று சனாதிபதித் தேர்தலுக்கு தயாரான போதும், சந்திரிகா அரசு, பல முக்கிய தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வழங்கியது.

ஏதோ நாட்டு மக்களின் கைகளைப் பற்றி ஒளிமயமான, சந்தோசமும் சமாதானமும் நிலவும் அற்புதமான புதிய உலகத்திற்கு அழைத்துச் செல்வதுபோன்ற வார்த்தை வர்ணங்களை அள்ளி விசிறினார் சந்திரிகா. தற்போது ஐந்தாண்டுகள் முடிவடைந்துவிட்டன. அடுத்த தேர்தலுக்கான மாதங்கள் நாட்கள் எண்ணப்படுகின்றன.

ஆனால் மக்கள் புதிய உலகு எங்கும் பிரவேசிக்கவில்லை. அதே கெந்தக வாடைவீசும் யுத்த பூமியில் மரணமும் துயரும் தொல்லைகளும் வறுமையும் கொடுமையும் வாட்ட, ஓய்வில்லாமல் மேடைபோட்டுப் பேசும் இந்த வாய் வீச்சங்களை கேட்டு நொந்துபோகின்றனர். இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளினதும் பிற்போக்குத்தனமான கொள்கைகளால் இடையுள் மௌனமாகவே நசியுண்டு போகின்ற சிங்கள மக்கள் மீளும் வழி அருகில் தெரிவதாக இல்லை.



சந்திரிகாவின் பிரதான தேர்தல் கோசமாகவும் சமாதானக் கோசமாகவும் மனிதாபிமானக் கோசமாகவும் இருந்தது யுத்தத்தை உடன் நிறுத்தல் என்ற கோசமே. இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு வார்த்தைமூலம் அரசியல் தீர்வுகாணல், போரை முடிவுக்கு கொண்டு வருதல் மூலம் அழிந்துகொண்டிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான இளம் உயிர்களைக் காப்பாற்றுதல் என்ற கோசம் எவ்வளவு ஈர்ப்புடையது.

மரணத்தின் தன்மையை அறிந்து கொண்டவராகவும், அதன் சோகவடுக்கள் மனதில் ஆளப் பதியப்பெற்றவராகவும், கணவனை இழந்த இளந்தாய்க்குரிய பரிதவிப்புடன் அவர் உதிர்த்த ஒவ்வொரு வார்த்தைகளும், சிங்கள மக்கள் மத்தியில் இருந்து இரக்கவாக்குகளையும் நம்பிக்கை வாக்குகளையும் காவிவந்தன. அவரை வெற்றிபெற வைத்தன.

இன்றோ நிலமை தலைகீழாகத் தெரிகின்றது. சிறீலங்கா



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசைப் பொறுத்தவரை, யுத்தத்தை நாடு பூராவும் பரவ வைத்த பெருமையை தற்போதைய சனாதிபதி சந்திரிகாவே பெருமையுடன் தனதாக்கிக்கொள்ளவேண்டியவரா கின்றார். யுத்தத்தின் தீவிரம், பற்றி எரிகின்ற அதன் சுடுசுவாலைகள் தீவெங்கும் பற்றிப்படர வைத்த பெருமை அவரையே சாரும்.

யாழ்ப்பாணத்தில் கொடியேற்றி புலிகளை வன்னிக்குள் முடக்கி விட்டதாக அன்று பெருமைபேச மட்டும்தான் சந்திரிகா அரசால் முடிந்தது.

இளைய உயிர்களின் குறிப்பாக சிங்கள இளைஞர்களின் அநியாய இழப்புக்கு கண்ணீர் சிந்திய சந்திரிகாவின் ஆட்சியிலேயே, சிங்களப் படையில் பெருந்தொகையானோர் உயிரிழந்திருக்கின்றனர். பல மடங்கினர் அங்கவீனர்கள் ஆகியிருக்கின்றனர். பல்லாயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர்.

**குற்றவாளிகள் கண்டறியப்படவேண்டும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற துடிதுடிப்பும் தற்போது செம்மணி விடயத்தில் இல்லை. ஆட்சியின் ஆரம்பத்தில் கொன்று புதைக்கப்பட்ட தமிழர்களின் எலும்புக் கூடுகளை, ஆட்சியின் அந்தத்தின் போதுகூட தோண்டி எடுக்க சங்கடப்பட்டு, பல இழுத்தடிப்புக்கள், மொட்டைக்காரணம்**

ஐக்கிய தேசியக்கட்சியின் நீண்டதும் கொடுமையானதுமான பதினேழு ஆண்டுகால ஆட்சியின் சாதனைகளை விழுங்கிவிடும் விதமாய் சந்திரிகாவின் ஆட்சி அவலமும் அழிவும் நிறைந்தது.











தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## - சுப்பு -

அன்றாடப் பாவனைப் பொருட்களின் விலையோ மக்களை முறைத்துக்கொண்டிருக்கின்றது.

சூரியகந்தை புதைகுழிகளின் விறுவிறுப்பும், மனித உரிமை குறித்த பேச்சுக்களும், குற்றவாளிகள் கண்டறியப்படவேண்டும் தண்டனை வழங்கப்படவேண்டும் என்ற துடிதுடிப்பும் தற்போது செம்மணி விடயத்தில் இல்லை.

ஆட்சியின் ஆரம்பத்தில் கொன்று புதைக்கப்பட்ட தமிழர்களின் எலும்புக்கூடுகளை, ஆட்சியின் அந்தத்தின் போதுகூட தோண்டி எடுக்க சங்கடப்பட்டு, பல இழுத்தடிப்புக்கள், மொட்டைக்காரணம் கூறியபடி காலங்கடத்தல்கள் என, சந்திரிகா அரசின் மனித உரிமை முகம் நசுங்கிச் செத்துக்கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, எந்தச் சிங்களத் தலைவர்களோ தலைவிகளோ ஆட்சிக்கு வந்தாலும் முகம் வேறுவேறாக இருக்குமே யொழிய அகம் ஒன்றாக இருக்கும் என்பதில் தெளிவாக இருக்கின்றனர். சந்திரிகா சிரித்த முகத்துடன் கைகூப்பியபடி தோற்றமளித்தாலும், அந்த தோரணைக்குப் பின்னால் கொடிய இன அழிப்பின் கொடூரம் ஒளிந்திருப்பதை வரலாற்றுப் பாடத்தை பட்டுநொந்து கற்றுக்கொண்ட தமிழ் இனம் அறிந்திருக்காமல் இருந்திருக்க முடியாது.

சமாதானத்தை அதிதீவிரமாகவும், தமிழ் மக்களின் உரிமை குறித்தும் உச்சத்தொனியுடனும் உச்சரித்த சந்திரிகா இந்த ஐந்தாண்டுகளில் தமிழ் மக்களின் ஒவ்வொரு உரிமைகளாக உரித்தெடுத்து, இறுதியாக உள்ளாடைகள் வரைக்கும் கொண்டு வந்து விட்டிருக்கின்றார்.

இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளில் தமிழ் மக்களின் நிலை என்ன?

நவீன உலகில், பாரதூரமான அடிமை வாழ்க்கை தமிழ் மக்களுக்கு உருவாக்கிக் கொடுத்த பௌத்த சிங்களப்பேரினவாதத்தின் முதன்மைத் தலைவியாகவே சந்திரிகா தற்போது தோற்றம் பெற்றிருக்கின்றார்.

சமாதானத்திற்கான யுத்தத்தை நடத்தி, பெருந்தொகை உயிர்களையும் உடமைகளையும் போரின் தீ நாக்குகளுக்கு தின்னக்கொடுக்கும் சாதனையை சந்திரிகா மட்டுமே, இவ்வளவு குறுகிய காலத்தில் செய்துமுடித்திருக்கின்றார்.

சந்திரிகா அன்று குறிப்பிட்டது போல எதுவுமே நடைபெறவில்லை. பின்னர் எதற்கு ஐந்தாண்டுவிழா என்று சிங்கள மக்கள் தான் கேட்க வேண்டும். ஓராண்டில் நீக்கப்படும் என அறிவிக்கப்பட்ட சனாதிபதி ஆட்சிமுறை நீக்கப்படவில்லை. அதற்கான சிந்தனையும் இல்லை. நோக்கமும் தென்படவில்லை. மக்களின் அடிப்படை வாழ்வாதாரப் பாவனைப் பொருட்களின் விலைகளைக் குறைத்தல் என்ற வாக்குறுதி எங்கோ எகிறிச் செல்ல, மக்களின்

**சந்திரிகா இந்த ஐந்தாண்டுகளில் தமிழ் மக்களின் ஒவ்வொரு உரிமைகளாக உரித்தெடுத்து, இறுதியாக உள்ளாடைகள் வரைக்கும் கொண்டுவந்து விட்டிருக்கின்றார்.**





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களால் வீதியில் நடமாட முடியாது.

மக்களால் கடலில் வலைவிரிக்க முடியாது.

மக்களால் நிலம்பிரித்து நெல் விதைக்க முடியாது.

அதை அறுத்து வீடுநோக்கி கொண்டுசெல்லமுடியாது.

மக்களால் காலாற வீதியில் நடக்க முடியாது.

வேண்டிய நேரத்தில் விழாக்கள் கொண்டாடமுடியாது.

ஊர்விட்டு ஊர்செல்ல முடியாது.

உறவினர் வீட்டில் தங்கி உறவு கொள்ளமுடியாது.

வீடுகளைப் பூட்டிவைக்கவும் திறந்துவைக்கவும் இராணுவமே உத்தரவிடுகின்றது.

வேலியை அகற்றவும் மதில்களை இடித்து அகற்றவும் அதுவே கட்டளையிடுகின்றது.

கூட்டமாய் செல்லத் தடை. கூடிப்பேசத் தடை. விரும்பியபடி விரும்பிய அளவு உணவுகொண்டு செல்லத்தடை. ஆடைகளுடன் மீன் பிடிக்கச் செல்லத்தடை.

தடை....தடை...தடை இதுவே தமிழரின் நிலங்களில் சந்திரிகா விதைத்த சமாதானத்தின் விதைகள்.

கைதுகள் கொலைகள் காணாமல்போதல் என்பன, என்றுமில்லாமல் தமிழர் நிலங்களில் அவலமாய் விரிந்துவிரிந்து தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவை கசக்கிப் பிழியும் துடிப்புடன் அதன் மையநிலைநோக்கி தன் நாசக்கரங்களை நீட்டத்துடிக்கின்றது.

ஐந்தாண்டுகளில், சந்திரிகா அரசு இதனைத்தவிர ஒன்றையும் செய்ததாக இல்லை. அழிப்பும் அழிவுமாய் இலங்கைத்தீவை அழிவின் விளிம்புக்குத் தள்ளிக்கொண்டிருப்பதைத் தவிர அவர் வேறு எதனையும் செய்யவில்லை அல்லது செய்யமுடியவில்லை. பௌத்த சிங்களப் பேரினவாதப் பெருமை பேசுகின்ற இந்த ஆட்சிக் கதிரையில் அமருகின்ற எவரும், எத்தனை ஆண்டுகள் கொண்டாட்டம் நடத்தினாலும் இதனையே செய்வர்... செய்துமுடிப்பர்.

▼▼

# நாயகன் வழி நடப்போம்

வேலணையூரான்

எல்லையிலே நாம் நின்று
கூவியழைப்பது
நல்லையிலே உறைகின்ற
நாதனிற்குக் கேட்காதா?
வள்ளி தெய்வ யானையொடு
ரதமேறும் வடிவேலா
புள்ளி மயில் மீதேறிப்
பறந்தொருக்கால் வருவாயா?
காத்திட வேண்டுமென்று
கார்த்திகேயனே உன்னை வேண்டி
பார்த்திருக்கிறோமையா
பறந்தொருமுறைதான் வருவாய்
நல்லையை தாண்டி நாங்கள்
நடந்ததை உந்தன் கண்கள் கண்ட
தில்லையை கந்தா கூறாய்
ஊரெங்கும் வெடியதிர
ஊமைகளாய் நாமழுதோம்
போரெங்கும் தலைவிரிக்க கால்
போன திசை நாம் நடந்தோம்
மானமே பெரிது என்று
மதித்தவர் போன கோலம் கண்டு
வானமே அழுததையா
வையகம் துடித்ததையா
ஊர் இழந்து உறவிழந்து
நக்ங்கள் ஊர்கோலம் போகையில் - நீ
யார் வேடம் கொண்டெங்கள்
கூட நடந்தாயோ?
பாதி இரவோடு பறிபோன
ஊரின் நினைவோடு
மீதி உறவுகள் நாம் - இப்போது
வீதிகளின் ஓரம்
வேர் பாறிய விருட்சங்களாய்
நாளை
ஊரது சென்று இந்த
உறவுகள் ஒன்று சேர
போரதில் புலிகள் வென்று ஆளும்
பேயினம் அழியவேண்டும்
நாளையெம் தேசம் காண
நாயகன் வழி நடப்போம் - தமிழ்
ஈழமே சிரிக்கும் பேதெம்
ஊரதிற் கால் பதிப்போம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ்ப்பாணத்தில் நிலைமை வழமை

**-சந்திரிகா அரசு**

# கொடுமைகளே அங்கு

**-அரசசார்பற்ற நிறுவனம்**




யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது. சந்திரிகா அரசு சொல்கிறது அங்கே நிலைமை வழமை என்று. ஆனால் 23.07.99–ல் வெளியிடப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பின் அறிக்கையோ சந்திரிகாவின் சிறீலங்கா அரசாங்கத்தினால் அங்கே தமிழ் மக்கள் இனத்தின் பெயரால் வதைக்கப்படும் விதங்களை ஐந்து தலைப்புக்களின் கீழ் வெளியிட்டுள்ளன. இந்த அறிக்கை ஜூலை 12–ம் திகதி பள்ளிமுனையில் தமிழ் இளம்பெண் ஜடா கமலிட்டா சிறீலங்கா இராணுவத்தால் உதடுகள் கடித்து குதறப்பட்டு பல முறை மிருகத்தனமாக பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டு அவளது உள்ளுறுப்பில் வெடிவைத்துக் கொல்லப்பட்ட கோரசம்பவத்தினை கேட்டு திகைக்கும் உலகின் மனச்சாட்சியுள்ள மனித தன்மையுள்ள மனிதர்களின் திகைப்பை மேலும் பலமடங்கு அதிகரிக்க வைத்துள்ளது.

## இராணுவ ஆட்சியில் வதைப்பு ஜனநாயக ஆட்சியென நடிப்பு

தினமும் மாலை 9 மணி முதல் காலை 5 மணி வரை யாழ்குடாநாடெங்கும் ஊரடங்குச் சட்டம். வேறு வகையில் கூறுவதானால் இந்த ஊரடங்குச் சட்டம் சிறீலங்கா இராணுவத்தினர் அப்பாவி தமிழ் மக்களை இனக்கொலை செய்ய இனத் துன்புறுத்தல் செய்ய சிறீலங்கா அரசாங்கம் அளிக்கும் சட்டபூர்வமான கால அவகாசம்.

தமிழரின் வரலாற்றுத் தாயகத்திலே அவர்கள் சுதந்திரமாகத் தம் ஊர்களில் வீடுகளில் வாழத் தடை. 45 கிராமசேவையாளர் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதியில்லை. 10 கிராமசேவையாளர் பகுதிகளில் அப்பகுதிகளில் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் மட்டும் நடமாட அனுமதி. இப்பகுதிகளில் யாழ்குடாநாட்டின் மற்றைய பகுதிகளை சேர்ந்தவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். 15 கிராமசேவையாளர் பகுதிகள் இராணுவத்தால் துப்பரவு செய்யப்படாத பிரதேசங்களாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இந்த இராணுவத்தால் துப்புரவு செய்யப்படாத பகுதிகள் என சிறீலங்காவால் பெயர் சூட்டப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கு பலவிதமான மனிதாயத்திற்கு எதிரான குற்றங்களை சிறீலங்கா பகிரங்கமாகவே செய்து வருகிறது. உதாரணமாக இந்தப் பிரதேசத்திற்குள் வாழும் மக்கள் 5 கிலோ அளவான உணவுப் பொருட்களை மட்டுமே தமது பணத்தைக் கொடுத்துக் கூட வாங்கிச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

**பற்றிமாகரன்**

குடிமக்களின் நிர்வாகத்திற்கு பொறுப்பான அரசாங்க அதிபர்கள் உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் திணைக்கள தலைவர்கள் அனைவரும் சிறீலங்கா பாதுகாப்பு படை அதிகாரிகளின் கட்டளைகளையே தலைமேல் கொண்டு செயற்படவேண்டும். மக்களி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னதும் பொருட்களினதும் போக்குவரத்துக்கள் அனைத்தும் பல இராணுவச் சோசனைச் சாவடிகளில் சோதனையிடப்பட்டு அனுமதிக்கப்படுவதால் மக்களின் நடமாட்டச் சுதந்திரம் என்பது சந்திரிகா அரசால் நசுக்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்தை விட்டு வெளியே வரும் பொழுதும் உள்ளே செல்லும் பொழுதும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றே பயணிக்க வேண்டும். இந்த நிலை பொருட்களுக்கும் பொருந்தும். சுற்றி வளைப்புக்களும் காரணமின்றி கைது செய்வதும் சிறீலங்கா பாதுகாப்பு படைகளின் விருப்பு. குடும்பப் படம் ஒட்டப்பட்ட விசேட இராணுவ அட்டைகளை மக்கள் வைத்திருக்கவேண்டும். வீடுகளில் எத்தனை பேர் உள்ளனர் என்பதை பொலிசில் பதிய வேண்டும். பொது ஊர்வலங்களுக்கு தடை. பொதுக்கூட்டங்களுக்குக் கட்டுப்பாடு. ஆற்றலற்ற சிவில் நிர்வாகம் மக்களது வாழ்க்கை பிரச்சினைகளை மேலும் மோசமாக்குகின்றது. சட்டத்தையும் ஒழுங்கையும் சிறீலங்கா தனது பொலிசாரைக் கொண்டு செய்வதாக கூறிவருகின்ற போதிலும் போதிய பொலிசார் செயற்பாட்டில் இல்லாமை எவ்வளவு தூரத்திற்கு சிறீலங்காவின் கூற்றுக்களில் உண்மை இருக்கின்றது என்பதை உலகுக்கு உடன் உணர்த்துகின்றது. ஜனநாயகத்தை எந்தவிதமான ஜனநாயக பங்களிப்போ அல்லது உள்ளூராட்சி நிர்வாகமோ அங்கு செயற்படவில்லை. மாதாந்தம் சிறீலங்கா பாராளுமன்றத்தில் நீக்கப்படும் அவசரகால சட்டத்தின் மூலமாக இங்கு இராணுவ ஆட்சி சிறீலங்காவால் நடாத்தப்படுகிறது என்பதே உண்மை. இந்த இராணுவ ஆட்சிக்கு ஆதரவு கொடுக்கும் தமிழ்க்குழுக்களை தமிழ் மிதவாதக் கட்சிகள் என்று மகுடம் சூட்டி சந்திரிகா உலகைப் பேய்க்காட்டலாம் ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த இராணுவ ஆட்சிக்கு துணைபோகும் எவருமே தங்களுக்கு ஏற்படுத்தப்பட்டு வரும் அவலவாழ்வின் பொறுப்பாளிகளாகவே கருதுகின்றனர்.



## அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடைகளும் அதனால் துடிக்கும் அப்பாவித் தமிழரும்

பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற பெயரில் இங்கு வாழும் மக்கள் தமது வருமானத்தை பெறும் முயற்சிகள் அனைத்தும் கடினப்படுத்தப்படுகிறது. இதனால் வேலையில்லாத் திண்டாட்டமும் குறை அபிவிருத்தியும் இப்பிரதேசத்தை பிடித்தாட்டுகிறது. விவசாயத்தைப் பொறுத்தவரை 7500 ஹெக்டர் ஏக்கர் மேட்டுநில தோட்டப் பிரதேசத்தில் 3500 ஹெக்டர் ஏக்கர் மட்டுமே பயிர்ச்செய்கைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால் தோட்டப் பயிர்ச்செய்கையில் குடும்பமொன்றுக்கு 3/16 ஏக்கர் நிலமே பயிரிடக்கிடைக்கின்றது. நெற் பயிற்செய்கையைப் பொறுத்தவரை இந்நிலை மேலும் மோசமடைந்துள்ளது. 12000 ஹெக்டர் ஏக்கர் நிலத்தில் 6000 ஹெக்டர் ஏக்கர் நிலம் மட்டுமே நெற்பயிற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. விவசாய உள்ளீடுகள் மிக உயர்விலைகளிலும் தட்டுப்பாடான நிலைகளிலும் காணப்படுகின்றன. இதனால் பயிர்ச்செய்கைக்கு அதிக முதலீடு தேவைப்படும் அதேவேளை இலாபமில்லாத பரிதாப நிலை காணப்படுகிறது. சந்தைப்படுத்தல் வசதிகளின்மை, பயிர் நட்ட உத்தரவாதங்கள் அற்றுக் காணப்படுதல் என்பவற்றாலும் யுத்தத்தினால் பாதிப்புறும் பயிர்ச்செய்கைக்கு எதுவித நஷ்டஈடும் கொடுக்கப்படாததினாலும் விவசாயிகள் மேலும் மேலும் வறுமைக் கோட்டினுள் தள்ளப்படுகின்றனர்.

மீன்பிடித்துறையைப் பொறுத்தமட்டில் காலக்கட்டுப்பாடுகள், தரிப்பிடக்கட்டுப்பாடுகள், படகுகள் அனுமதிக்கப்படாது கட்டுமரங்கள் அனுமதிக்கப்படுதல் யுத்தத்தால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாமை போன்றவை மீன்பிடித்துறை வருமானத்தை தரைமட்டமாக்குவதுடன் மீனவர்களின்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடலுக்கும் உயிருக்கும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது.

சிறு கைத்தொழில்கள் குடிசைக் கைத்தொழில்களைப் பொறுத்தமட்டில் போக்குவரத்துத் தடைகள் மூலப்பொருட்களின் விலையை உச்சத்துக்கு கொண்டுசென்றுள்ளன. இதுமட்டுமல்ல மூலப் பொருட்களின் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாகவும் உள்ளது. கொழும்பிலிருந்து இந்த துறைகளைத் தாக்கியழிக்கக்கூடிய வகையில் பொருட்கள் சந்தையில் குவிக்கப்படுகிறது. அதே வேளை உள்ளூர் பொருட்களுக்கு சந்தை வசதிகள் மறுக்கப்படுகின்றன. யுத்தப் பாதிப்புக்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படாமை முதலீட்டாளரிடையே முதலீடுகளை மேற்கொள்வதில் அச்சத்தை ஏற்படுத்தி இத்துறைகள் நாசமடைந்து வருகின்றன.

வர்த்தகத்தைப் பொறுத்தமட்டில் சிறீலங்கா திறந்த பொருளாதாரக் கொள்கைகளை கடைப்பிடிப்பதாக கூறப்பட்டபோதிலும் யாழ்ப்பாணத்தில் மூடிய பொருளாதார அமைப்பையும் கட்டுப்பாடுகளையும் சிறீலங்கா நடைமுறைப்படுத்தியுள்ளது. சில வியாபாரிகளின் தனி உரிமையினால் பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன. யாழ்ப்பாணத்தை சிங்கள இராணுவம் துப்பரவாக்கிய பிரதேசமாக சிறீலங்கா வர்ணித்து மகிழ்கின்ற போதிலும் இப்பிரதேசத்திற்கும் துப்பரவாக்காத பிரதேசங்களுக்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதிபெறப்பட்டாலே அத்தியாவசிய பொருட்கள் உணவு ஆகியனவும் பிரயாணங்களும் அனுமதிக்கப்படுகின்றன. மேலும் யுத்த பாதிப்புக்களுக்கு நஷ்டஈடுகளும் மறுக்கப்படுகின்றன. இவற்றால் வர்த்தக முயற்சிகள் வருமானம் ஈட்டமுடியாத நிலையும் காணப்படுகின்றன.

**தமிழீழ மக்களை திறந்தவெளி கைதிகளாக்கி அங்கு நிலைமை வழமை எனும் சிறீலங்காவின் அடக்குமுறை ஒடுக்குமுறை தந்திரங்கள் தகர்த்தெறியப்படும் காலம் வெகு தூரத்தில் இல்லை**

உற்பத்தி சுழற்சி வட்டம் உற்பத்தியாளர்களுக்கு வருமானத்தை வழங்க முடியாத நிலை காணப்படுவதினால் தொழிலின்மைகளும் குறைந்த ஊதியங்களும் தொடர்ச்சியாக வேலை செய்யமுடியாத் தன்மைகளும் தொழிலாளிகளைத் தாக்கி உருக்குலைத்து வருகின்றன.

## மனித உரிமை மறுப்பினூடாக நாளாந்த வாழ்வு தடுக்கப்படுகிறது

தமிழர்களின் வாழும் உரிமை பல விதமான தடைகளூடாக மறுக்கப்படுகிறது. முக்கியமாக நாளாந்த உணவினை பெறமுடியாத வகையில் திட்டமிட்ட வேலையின்மைகளும் குறை அபிவிருத்தியும் உருவாக்கப்பட்டுள்ளது.

காரணமற்ற கைதுகளும் காணாமல் போதல்களும் தொடர்கிறது. 1996–ல் கைது செய்யப்பட்டவர்களில் 600 பேரையும் காணாமல் போனவர்களாக அறிவித்த கொடுமை நிகழ்ந்ததும் அந்தக் கொடுமையின் சான்றுகளாக மனிதப் புதைகுழிகள் பற்றிய உண்மைகள் வெளிவந்ததும் உலகறிந்ததே. ஆயினும் இந்த உண்மைகள் வெளிவந்தமை சிறீலங்காவுக்கு எந்தவித தயக்கத்தையும் தோற்றுவிக்கவில்லை. சர்வதேச உலகை பற்றி அக்கறையற்ற நிலையில் சிறீலங்கா படைகள் காணமல் போதல்களையும் காரணமற்ற கைதுகளையும் தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

மூன்று ஆண்டுகளாக சில பிரதான பாடசாலைகள் இராணுவத்தால் தங்கள் முகாம்களாக மாற்றப்பட்டு கல்வி பாதிப்புற்றுள்ளது. கோவில்களும் தேவாலயங்களும் உயர்பாதுகாப்பு பிரதேசங்களில் மூடப்பட்டு அல்லது மிக குறைந்த நேர வழிபாட்டு அனுமதியுடன் காணப்படுகின்றது. மிக குறைந்த அளவிலேயே பக்தர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்களுக்குத் தடை. பேச்சு சுதந்திரத்துக்கு தடை. நமாடும் சுதந்திரம் சோதனை சாவடிகளாலும் ஊரடங்கு உத்தரவுகளாலும் தடுக்கப்படுதல். சமூக கலாச்சார கல்வி நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடுகள், சர்வதேச பணவரவை தடுப்பதன் மூலம் தொண்டர் நிறுவனங்களின் சேவைகளை தடுத்தல். கைதாக்கப்படுபவர்களை சித்திரவதைப்படுத்த காங்கேசன்துறை தடுப்புமுகாம் கைதிகளை அனுராதபுர நீதிமன்றத்தில் விசாரித்தல் மக்கள் வெறுக்கத்தக்க நிர்வாக முறை







தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களும் நிர்வாகமும் மீனவர்களை சாரம் கூட அணி அனுமதிக்காது கோவணத்துடன் மீன்பிடிக்க வைக்கும் கொடுமை கைதாக்கப்படுபவர்களுக்கு சிங்களத்தில் கைதாக்கல் சான்றிதழ் கொடுத்தல் போன்றவை என பல்வேறு வகையான கொடுமைகள் மக்களை சிறந்தவெளி சிறைச்சாலையில் சிறீலங்கா தங்க வைத்திருப்பதாக உணரச் செய்கிறது.

## அச்சமுற்ற வாழ்க்கையும் நம்பிக்கையற்ற எதிர்காலமும்

காணாமல் போதல் காரணமின்றி கைதாக்கல் என்பவற்றால் மனித உரிமைகள் பகிரங்கமாக மீறப்பட்டு வருவதினால் மக்களிடை அச்சமே வாழ்க்கையாகி வருகிறது. இதனால் பெற்றோர்களும் உற்றோர்களும் இளம் பிள்ளைகளை குடாநாட்டுக்கு வெளியே அனுப்புவதில் அக்கறை காட்டி வருகின்றனர். குண்டுவெடிப்புக்களோ தாக்குதல்களோ ஏற்பட்டால் அந்த இடத்தினை சூழவுள்ள மக்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாவதுடன் அவர்களது உடமைகள் குறிப்பாக குடிமனை அழிக்கப்படுகிறது. இளம் பெண்கள் மற்றும் பள்ளி மாணவிகள் சோதனைச்சாவடிகளில் அதிக நேரங்களுக்கு விசாரிக்கப்படுவதுடன் விரசமான முறைகளில் நடாத்தப்பட்டு வருகின்றனர். இதனால் தமிழ்ப் பெண்கள் மனமுடைந்தவர்களாக துடிக்கின்றனர்.



கடந்த இரு தசாப்தங்களாக இவ்விதமான கொடுமைகளை அனுபவிக்கும் தமிழ் மக்கள் தங்களை சிறீலங்கை அந்நியர்களாக நடாத்துவதாகவே உறுதியாக கருதுகின்றனர். இந்த அந்நியத்தன்மை யாழ் குடாநாட்டில் ஆக்கிரமிப்புடன் இணைந்து மனித வதையாக மாறி வருகின்றது. இந்த சிறீலங்காவின் மனித வதையினால்

1) குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்களாக

2) இடப்பெயர்வுகள் அடைபவர்களாக

3) வீடுவாசல்கள் உடமைகள் அழிக்கப்படுவதை அனுபவிப்பவர்களாக

4) வேலையின்மையில் தவிப்பவர்களாக

5) கல்வி சீர்கேடுகள் சிறுதொழில் செய்யும் நிலை போன்ற பரிதாபங்களை அனுபவிப்பவர்களாக

6) உணவின்மையால் பட்டினி சத்துணவு இன்மையால் நோய்கள் போன்றவற்றுக்கு உள்ளாகி தவிப்பவர்களாக

7) தொழில் இன்மையால் முடமாக்கப்பட்டவர்களாக

8) பிரயாண வசதிகளற்றவர்களாக

9) உயர் வாழ்க்கை செலவுடன் போராடுபவர்களாக

10) தமதும் தமது குழந்தைகளதும் உயிர் உடமைகளுக்கு உத்தரவாதம் அற்றவர்களாக

யாழ்குடாநாட்டில் வாழ்கின்றனர்.

இதனைப் பார்த்து ஜனநாயக வாழ்வில் சந்திரிகா தமிழர்களை இணைப்பதாக யாராவது கூறுவார்களானால் அவர்களை அரசியல் பார்வையற்றவர்களாகவே கூறவேண்டும். இதனைப் பார்த்து யாழ்ப்பாணத்தில் நிலைமை வழமை என யாராவது கூறுவார்களானால் அவர்கள் மனித நேயமற்றவர்களாகவே கருதவேண்டும். இறுதியாக ஒரு வார்த்தை தமிழ்ப் பெண்ணாகப் பிறந்த ஒரே குற்றத்திற்காக ஜடா கமலிடாவை உதட்டைக் கடித்து குதறி பலமுறை பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கி இறுதியில் உள்ளுறுப்பில் வெடிவைத்து கொன்ற கொடுமையை சிறீலங்கா இராணுவம் செய்ததை முதலில் குறிப்பிட்டிருந்தேன். இந்த தமிழ்ப்பெண் தமிழ்நாட்டில் அகதியாக வாழ்ந்து மன்னாரில் மீளக் குடியமர்த்தப்பட்டவர் என்பது பலருக்கு தெரியாத உண்மை. இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பான அமைதி வாழ்வு ஏற்படமுன்பாக அங்கு அகதிகளை திருப்பி அனுப்பியதன் விளைவாகவே இந்த அப்பாவிப் பெண் இனத்துன்புறுத்தல் இனக் கொலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். இந்த கொடுமைக்கு சர்வதேச சமூகமும் தமிழ்நாட்டு இந்திய அரசுகளும் எடுத்த சிந்தனையற்ற முடிவுகளும் மறைமுக காரணமாக அமைந்துள்ளன என்பது உண்மை. ஆகவே ஐக்கிய நாடுகள் சபையும் அதன் பொறுப்பு வாய்ந்த அமைப்புக்களும் இந்திய தமிழக அரசுக்களும் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பான அமைதி வாழ்வு திரும்ப தமிழ்மக்களின் நியாயமான நேர்மையான தேசிய விடுதலை போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

தமிழீழ மக்களை திறந்தவெளி கைதிகளாக்கி அங்கு நிலைமை வழமை எனும் சிறீலங்காவின் அடக்குமுறை ஒடுக்குமுறை தந்திரங்கள் தகர்த்தெறியப்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை. இதனை விரைவாக்கிட எங்கள் மக்களுக்கு பாதுகாப்பான அமைதி வாழ்வு விரைவாக மீள நிதியும் மதியும் அளித்தல் புலம்பெயர் தமிழீழ மக்களாகிய எம் ஒவ்வொருவரதும் கடமை. ▼



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பன்னிரெண்டு ஆண்டுகளும் பன்னிரெண்டு நாட்களும்



*நல்லூரின் வீதியில் பொட்டுப் பொட்டாகச் சில புள்ளிகள். ஒன்றிரண்டாகக் கூடிய மக்கள் கூட்டம் வெள்ளமாகப் பெருக்கமடைகிறது. அந்த சன சமுத்திரத்தின் ஆத்ம வெளிப்பாட்டின் மையப் புள்ளியாக தியாகி திலீபன். அவருடைய ஜீவன் இப்பொழுதோ இன்னும் சிறிது நேரத்திலோவென்று ஆடுகிறது. ஆலய மணியும், ஆத்மப் பெருமூச்சுக்களும் ஒன்று திரண்டு காற்றுவெளியை ஓங்கி அசைக்கின்றன. எவ்வளவோ முயற்சித்தும் திலீபனின் இழப்பைத் தவிர்க்க முடியவில்லை. ஏன் தவிர்க்க முடியாது போனது? இது ஓர் முக்கிய கேள்வியாகும். அது தவிர்க்கப்பட்டிருந்தால் அன்றைய நிலையில் சம்பந்தப்பட்ட அரசுகள் அணிந்திருந்த தார்மீக, புனித முக்காடுகள் விலக்கப்படாமல் அவர்களின் நிஜ வடிவமாகவே கற்பிதமாகியிருக்கலாம்.*



போர்களாலும், அமைதியாலும் உண்மையை விடுவித்துச் செல்லும் வரலாறு ஓர் சத்திய வேள்வியால் சில நிஜங்களைத் தோலுரித்துக் காட்டியது. அப்போதுதான் தமிழ்த் தேசியம் சட்டென வீறுகொண்டது. விடுதலைப் புலிகள் என்ற அச்சில் தன்னை இறுக்கமாகப் பிணைத்துக் கொண்டது. எத்தனை தடைகள் வந்தாலும் தாண்டும் அசுர பலத்தையும் அன்றுதான் அது பெற்றும்கொண்டது.

அன்றிலிருந்து நடைபெற்றுவரும் ஒவ்வொரு திலீபன் நினைவு நாளிலும் தமிழீழப் போர் படிப்படியாக உக்கிரமடைந்தே செல்வதைக் காண்கிறோம். அவருடைய பதினோராவது நினைவு நாளில் கிளிநொச்சி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும், தேசியக்கொடி ஏற்றிவைக்கப்பட்ட நிகழ்வும் அதற்கு நல்ல உதாரணமாகும். திலீபனின் பன்னிரெண்டாவது நினைவு தினத்துடன் இந்த நூற்றாண்டு நிறைவடைந்துவிடப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போகிறதென்றாலும், அடுத்த நூற்றாண்டிற்குள் ஒளியெறிந்து பிரவேசிக்க இருப்பதும், பேசப்படப் போவதும் திலீபன் கனவுகளாகவே இருக்கும் என்பது ஐயத்திற்குரியதல்ல. யாழ்.கோட்டையில் புலிக்கொடி பறக்கும் நாளே அவர் கனவை நிறைவேற்றும் நாள் என்பதை உணர்வோர் ஈழத்தமிழினம் கால் பதிக்கப்போகும் 21–ம் நூற்றாண்டின் வாயிலும் மணி விளக்காக ஒளிரப்போவது திலீபனின் தியாகமே என்பதை உணர்வர்.

பட்டினி கிடந்து போராடுவது மிகப்பெரிய வலிமை. தன்னை ஒடுக்கி, மற்றவர்களின் வாழ்வில் ஒளியேற்றப் பாடுபடுவது. இது போராட்டத்தின் பாதையில் முக்கியமான வழிகளில் ஒன்று. ஆனால் திலீபன் இந்த ஓர் வழியை மட்டும் கடைப்பிடித்தவரல்ல; போர்க்களத்தில் நின்று சாதனைகள் பல படைத்து விழிப்புண்களை ஏற்றவர். போராட்டத்தின் அவசியத்தை உணர்ந்து, அதன் வெற்றிக்காக எந்தெந்தத் துறைகளில் பணியாற்ற வேண்டுமோ அந்தந்தத் துறைகளிலெல்லாம் ஈடுபட்டு உழைத்த கர்மவீரர். "எமது அன்பான தோழன் திலீபன் தியாகமோ வித்தியாசமானது; வியக்கத்தக்கது; எமது போராட்டத்தின் வரலாற்றில் புதுமையானது" என்று தமிழீழத் தேசியத் தலைவரால் அவர் பணி போற்றுதலுக்குள்ளாக்கப்பட்டது. தனி மனிதனாக திலீபன் எடுத்த பட்டினிப் போராட்டம் இன்று தமிழீழத்தின் மிகப் பெரிய போராட்டமாக மாறியுள்ளது. பட்டினி தமிழீழ மக்கள் மீது ஓர் போர்க் கருவியாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. பட்டினிப் போர் முடிவில் எத்தகைய தாக்கத்தை உண்டுபண்ணுமென்பதையறிய இந்த நூற்றாண்டில் நடைபெற்ற மிகப்பெரிய பட்டினிப் போரையும்


> பட்டினி என்பது இறுதி ஆயுதம். அந்த நெருப்பை அகத்தில் ஏற்றி போராடும் இனம் வெற்றிக்குள்ளும் விடுதலைக்குள்ளும் கால் பதித்துவிடும்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னதமான தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் திலீபன் செய்திருக்கிறான்.**

அதன் விளைவுகளையும் அறிந்து கொள்வது அவசியம்.

இரண்டாவது உலக மகா யுத்தம், 1941–ம் ஆண்டு ஜூன் 22–ம் திகதி ஜேர்மனியப் படைகள் ரஷ்யாவிற்குள் புகுந்தபோது அவர்களுடைய சுற்றிவளைப்பிற்குள் இலக்காகிறது அழகான லெனின்கிராட் நகரம். 46 இலட்சம் மக்களைக் கொண்ட இந்த நகரத்தை இன்று பிடித்துவிடுவோம் நாளை பிடித்துவிடுவோமென அறிவித்தபடியே மூர்க்கமாகத் தாக்குகின்றன நாஜிப்படைகள். ஆனால் அங்கு வாழ்ந்த ரஷ்ய வீரர்கள் நகரத்திற்கு எட்டுக் கி.மீ.தூரத்திலேயே எதிரிகளை எதிர்கொண்டு போராடுகின்றனர். நாஜிகள் அடி அடியாக முன்னேறி நகரத்தின் எல்லையை நெருங்குகிறார்கள். செய்தியறிந்ததும் மக்களும் போரில் குதிக்கின்றனர். உலகின் பெரும் பெரும் நகரங்களையெல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் கைப்பற்றிய ஜேர்மனியர் ஒரு நாள் இருநாள் அல்ல ஆயிரம் நாட்களாக அந்த நகரை முற்றுகையிட்டுப் போர் தொடுத்தனர். இன்று வன்னிப் பெருநிலத்தில் வாழும் மக்களுக்கு நடப்பதைப்போல உணவுப் பொருட்கள் மருந்துப் பொருட்கள் உட்பட அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் தடை செய்தனர். இந்தப் பட்டினிப் போரால் ஐந்து இலட்சம் ரஷ்ய வீரர்களும் ஐந்து இலட்சம் பொது மக்களும் மரணமடைந்தனர். ஆனால் பட்டினியால் அல்லும் பகலும் வாட்டியெடுக்கப் பட்டு ஆத்ம பலம் பெற்ற மக்கள் தங்கள் விடிவிற்காக அசுர பலத்துடன் போராடினர். லெனின்கிராட் அடிபணிய மறுத்தது. இறுதியில் ஜேர்மனியர்களை அம் மக்கள் ஓட ஓட விரட்டியடித்தனர். அன்று பின் வாங்கிய ஜேர்மனியர்களை பேர்ளின் வரை துரத்திச் செல்கிறது ரஷ்யப் படை. ஈற்றில் அந்த பேர்ளின் நகரத்தையும் கைப்பற்றியது. இவ்வாறு இரண்டாம் உலக யுத்தத்தின் ஹிட்லருக்கு தோல்வி தந்த திருப்பு முனைப்போர் பட்டினியில் இருந்தே பிரவாகம் எடுத்துவந்தது வரலாறு. இந்த வெற்றிக்கு உயிர்தந்த பத்து இலட்சம் மக்களின் நினைவாக பிஸ்கரேவ் என்ற உலகப்புகழ்பெற்ற கல்லறையும், ஒன்றரைக் கி.மீ நீளமான மாவீரர் பூங்காவும் லெனின் கிராட்டில் ஏற்படுத்தப்பட்டன. இதுவே ரஷ்ய மக்களின் உயர்ந்த அஞ்சலிப்பிற்குரிய இடமாக இன்றும் திகழ்ந்து வருகிறது.

மேற்கண்ட லெனின் கிராட் முற்றுகைப் போரின் முன்னுதாரணம் சாதாரணவிடயமல்ல; வெறும் வரலாறுமல்ல. பட்டினி என்பது இறுதி ஆயுதம். அந்த நெருப்பை அகத்தில் ஏற்றி போராடும் இனம் வெற்றிக்குள்ளும் விடுதலைக்குள்ளும் கால் பதித்துவிடுமென்பதற்கான உதாரணமாகும். தமிழீழ மக்கள் ஏற்றுக் கொண்டுள்ள பட்டினிப்போர் ஆக்கிரமிப்பாளரை நமது மண்ணிலிருந்து முற்றாக வெளியேற்றி விடுதலையை நம் வசமாக்கும். திலீபனின் பன்னிரெண்டாவது நினைவலைகள் இந்த வெற்றி இராகத்தையே மீட்டிச் செல்வதாயுள்ளன.

தமிழீழ மக்கள் ஏற்றுக்கொண்டுள்ள பட்டினிப்போர்
ஆக்கிரமிப்பாளரை நமது மண்ணிலிருந்து முற்றாக
வெளியேற்றி விடுதலையை நம் வசமாக்கும்.
திலீபனின் பன்னிரெண்டாவது நினைவலைகள்
இந்த வெற்றி இராகத்தையே மீட்டிச்
செல்வதாயுள்ளன.

**வெற்றித்திருமாறன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மக்கள் மனம் கவர்ந்த தீபம்





**1ம் நாள்**
கண்ணீருடன் திலகமிடுகிறாள் ஒரு தாய்.

**2ம் நாள்**
நிலமையை தலைவர் கண்டு மனம் நெகிழ்ந்து போனார்.

**3ம் நாள்**
ஒரு சொட்டு சிறுநீரும் கழிக்கவில்லையாம்.

**4ம் நாள்**
நம் மக்கள் திலீபனின் நிலைகண்டு பயந்தனர்.

**5ம் நாள்**
இந்தியப்படை கேணல் பரா பார்வையிட்டார்.

**6ம் நாள்**
கிட்டண்ணாவை பார்க்க திலீபன் விரும்புகிறார்.

**7ம் நாள்**
உடல் தளர்ந்து குடல் சுருங்கியது.

**8ம் நாள்**
தமிழீழமெங்கும் எழுச்சித் தீ பரவுகிறது.

**9ம் நாள்**
கோட்டையில் மக்கள் கொந்தளிப்பு.

**10ம் நாள்**
எங்கள் திலீபனை சாகவிடாதேயென நல்லை வீதியெங்கும் மக்கள் வெள்ளம்.

**11ம் நாள்**
எங்கள் மகரயாழ் தந்தி தொய்ந்து கிடந்தது.

**12ம் நாள்**
மலை உயரம், முகில் உயரம், வானுயரம்
திலீபனின் மனத்திடத்தின் முன்னே எது உயரம்.

## அந்த உத்தமனின் ஐந்து அம்சக் கோரிக்கைகள்

**01.** பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இன்றும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்படவேண்டும்.

**02.** புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடாத்தப்படும் சிங்கள குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

**03.** இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்படவேண்டும்.

**04.** வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

**05.** இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்காவற்படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு தமிழ்க்கிராமங்கள், பள்ளிக்கூடங்களில் குடிகொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்படவேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




லெப்.கேணல்
திலீபன்
உண்ணாவிரதம்
இருந்த போது
கஸ்தூரியினால்
மேடையில்
வாசிக்கப்பட்ட
கவிதை

# திலீபன் அண்ணா

பத்து மாதம் அன்னையவள்
பத்திரமாய்ச் சுமந்து உன்னை
நிலத்தில் பெற்றெடுத்தாள்
சத்தியமாய் உன்னைப் பெற்று
எடுத்த இடம் தமிழீழம்.

பத்து மாதம் சுமந்தவள்
இன்று
நிலத்தில் இருந்திருந்தால்
உன்
ஒட்டிய வயிறு கண்டு
இரத்தக் கண்ணீர் வடித்திருப்பாள்.

திலீபன் அண்ணா!
உங்களுக்கு
பசியால் பார்வை மங்குவது
எனக்குத் தெரிகிறது.
இங்கிருக்கும் மக்கள் கூட
உங்களிற்கு
மங்கலாகத் தெரிகிறார்கள்
ஆனால்
தமிழீழம் மட்டும்
தெளிவாய்த் தெரிகின்றது.
உங்கள்
குழிவிழுந்த கன்னங்கள் கண்டு

இங்கு
குளமாகும் கண்கள்
எத்தனை, எத்தனை!

திலீபன்னண்ணா!
(உண்ணாமலிருக்கும் உங்களால்
எப்படிச் சிரிக்க முடியும்?)
எனக்குத் தெரியும்
நீங்கள் சாகும் போதும்
சிரித்துக் கொண்டே சாவீர்கள்.
ஏனென்றால்
நாங்கள் அழக்கூடாது என்பதற்காக.
எப்படியண்ணா அழாமல் இருக்க முடியும்?
உங்கள் ஒட்டிய வயிறும்,
குழிவிழுந்த கண்களும்,
குற்றுயிராய்க் கிடக்கும் நிலையும் கண்டால்
கல் நெஞ்சமும் கசிந்து கண்ணீர் விடும்.
உங்கள் நண்பர்கள் இங்கே
நடைப்பிணமாய்த் திரிகின்றார்கள்.
அவர்கள் ஆசைப்படுவதெல்லாம்
மெயின் மெயின்
திலீபன்
அல்பேர்ட் அல்பேட்
திலீபன்
மில்லர் மில்லர்
திலீபன்
என்று நீங்கள் திரும்பத் திரும்ப
வோக்கியில் பேசுவதைத்தான்
தயவு செய்து
ஒரேயொரு முறை இறுதியாக
அவர்களுக்குப் பேசிக்காட்டுங்கள்.

அன்று செந்நிறச் சேலைகட்டி
செங்குருதியில் பொட்டும் இட்டு
பாதாயாத்திரைக்கு அனுப்பி வைத்தீர்களே
அவர்களுக்கும் இறுதியாக
ஒரேயொரு முறை
பேசிக்காட்டுங்கள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மௌனமாய் அழைக்கும்
மரணித்த நண்பர்களிடம்
போகப்போகிறேன்
என்று, மக்களிடம் சொல்கிறீர்கள்.
இங்கு வருந்தி அழைத்து
வாடிக்கிடக்கின்றார்களே
உங்கள் குழந்தைகள்,
அவர்களுடன்
ஏன் வாழக்கூடாது?
திலீபனண்ணா!
உங்கள் நண்பர்கள் இங்கே
நடைபிணமாய்த் திரிகிறார்கள்
எங்கே நீங்கள் எங்களை
விட்டுப் போய்விடுவீர்களோ என்று.
தலையிலிருந்து கால்வரை
உங்களைத் தடவிக்கொண்டிருக்கும்
காட்சி கண்டு இங்கே
ரத்தக் கண்ணீர் சிந்துகின்றோம்.

திலீபனண்ணா
நான் நினைக்கவேயில்லை
உயிரோடு உங்களுக்கு
என்கையால் கவி எழுதி
அதை உங்கள் காலடியில் சமர்ப்பிப்பேன் என்று.
நீங்கள் தமிழீழத்தில் கொண்ட உறுதியால்
இன்னமும் மயங்காமல் இருக்கின்றீர்கள்.
ஆனால் உங்கள்
மீது கொண்ட பாசத்தால்
இங்கே எத்தனை தாய்மார்
தள்ளாடி விழுகின்றார்கள்!

திலீபனண்ணா
எவ்வளவு தைரியம் இருந்தால்
மகாத்மாவிற்கே
சவால் விடுவீர்கள்.
அவர்கூட நீர் அருந்தி நீண்ட நாட்கள்
நினைவோடு இருந்தாரே,
நீங்கள் ஏன் அண்ணா அருந்தக் கூடாது?
எனக்குத் தெரியும்
நீங்கள் இருந்த மாட்டீர்கள்;
தமிழீழத் தாகத்திற்குத்
தண்ணீர் அருந்தமாட்டீர்கள்.
இந்தியாவின் இறுதி முடிவிற்காய்
உங்களின் இறுதி மூச்சை
இழுத்துப் பிடித்திருக்கிறார்கள்;
ஆனால் இங்கே
உயிர் கொடுத்தவனை விட,
உணவு கொடுத்தவன் உயர்வாக மதிக்கப்படுகிறான்.

திலீபனண்ணா
பிரச்சினைக்கு மேல் பிரச்சினை வந்தால்
எம் மக்களிற்கு அடிப்படைப் பிரச்சினை
அறவே மறந்துவிட்டது.
இன்று இவர்கள் பிரச்சினை என்று
பிரகடனப்படுத்துவது எல்லாம்,
ஆமியின் வருகையும் அவசரகாலச் சட்டமும்
பொருளாதாரத் தடையுமே.
இன்று இவைகள் எடுபடலாம்.
நாளை, கல்வியில் சமவுரிமை
பல்கலைக்கழக புகு உரிமை
கிழக்கில் குடியுரிமை,
மலையக மக்களின் பிரசாவுரிமை
இல்லை என்பதை
இவர்கள் உணர்வார்கள்;
அப்போது அறிவார்கள்
அடிமைச் சாசனம் இன்னமும் அழித்தெழுதப்
படவில்லை என்று

மக்கள் புரட்சி வெடிக்காதோ என்று
மனந்தளராதே மாவீரனே!
இதோ நீ உயிரோடு இருக்கையிலே
உன் முன்னாலேயே இங்கொரு மக்கள் புரட்சி
வெடித்து விட்டது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








# எழுச்சிப் பேரணி

## சுவிஸில் அணிதிரண்ட தமிழீழ மக்கள்...

## நம்பிக்கையுடன் 21-ம் நூற்றாண்டினை நோக்கி...

இந்த நூற்றாண்டின் இறுதியில் ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மன்று நேரடியாகச் சந்தித்த மிகப்பெரிய தாக்கமான காரியங்களை வகைப்படுத்துவோர் கடந்த *09.08.99* அன்று நடைபெற்ற “21–ம் நூற்றாண்டில் தமிழீழத்தை நோக்கி” என்ற தலைப்பின் கீழான பேரணியின் முக்கியத்துவத்தை எளிதாக உணரலாம். உலக அரங்கில் ஒவ்வொரு தேசிய இனங்களும் தங்கள் தங்கள் உரிமைகளுக்கும் பங்கம் நேரும்போது தமது ஆள்புல எல்லைக் குட்பட்ட ஐ.நா மன்றின் கிளைகளிடம் நீதி கோரிச் செல்வது ஒரு வகையானது. ஆனால் ஆசிய வட்கையைச் சேர்ந்த தமிழீழ மக்கள் ஜெனீவாவில் உள்ள ஐ.நா மன்றை இத்தனை பெருந்திரளாகச் சூழ்ந்து நின்று தொடர்ந்து நீதி கேட்டுவரும் செயலானது இந்த நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்தில் நடந்தேறியிருக்கும் மிக முக்கிய எழுச்சி நிகழ்வென்பதில் ஐயமில்லை.

தமிழீழ விடுதலைக்கு அகத்தாக்கம் புறத்தாக்கமென இரு பரிமாணங்கள் உண்டு. அகத்தாக்கம் தமிழீழ நிலப்பரப்பிற்குள் நடைபெறுவதென்றால் புறத்தாக்கமானது அதற்கு வெளியே நடைபெறுவதெனலாம். மனிதர்கள் உலக மேற்பரப்பில் தேசிய இனங்களாக இணைந்து வாழ்வதும், இனத்துவ அடையாளங்களைப் பேணிக்காக்கும் வகையில் நாடுகளை உருவாக்குவதும் ஏற்கெனவே உலகால் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்கள். அந்த உரிமை தமிழீழ மக்களுக்கு எவ்வாறு மறுக்கப்பட்டுள்ளது என்பது பேரணியில் பல வடிவங்களில் எடுத்துரைக்கப்பட்டது.



சிறீலங்கா பேரினவாத அரசினால் நடாத்தப்பட்ட அட்டூழியங்களை விளக்கும் ஊர்திகள், நாகர் கோயில் குண்டுவீச்சு, செம்மணிப் புதைகுழி அவலங்களை விளக்கிச் சென்றன. சுமார் *7000*–ற்கும் மேற்பட்ட மக்களால் நீண்டு சென்ற பேரணியில் தாங்கப்பட்ட விளக்கப் படங்களும், பதாதைகளும் ஒரு பிரிவாக அவதானிப்பிற்கு உள்ளாகின. எந்தவொரு ஐரோப்பியக் குடிமகனும் ஒரு நிமிடம் நின்று தமிழீழ மக்களின் நிலை, அவர்கள் படும் அவலங்கள், புலம்பெயர் நாடுகளிலிருந்து இவ்வாறு ஒன்று கூடியிருக்கும் இம்மக்களின் கோரிக்கையென்ன? இவர்கள் யாரைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்தப் பேரணியில் கலந்துள்ளார்கள் என்பது போன்ற கேள்விகளுக்கு விடைகாண முயல்வது தவிர்க்க முடியாதது என்பதை பேரணி உணர்த்தியது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே தமிழர் தாயகத்தில் இன அழிப்பை மேற்கொண்டிருக்கும் சிறீலங்காப் படைகளும், கைக்கூலிகளும் தமிழீழ மண்ணைவிட்டு வெளியேறுதல் வேண்டும். தமிழீழத்தை தமிழரின் தாயகமென உலக சமூகம் அங்கீகரிக்க வேண்டும். தமிழீழ மக்களின் மனித அமைதி கிடைக்கும்வரை புலம் பெயர்ந்துள்ள தமிழீழ மக்கள் திருப்பியனுப்பப்படுவது நிறுத்தப்பட வேண்டும்... போன்ற தீர்மானங்களை அனைத்து மக்களும் உறுதியுடன் எடுத்துரைத்தனர். வண.இமானுவேல் அடிகள், திருமதி.அஞ்சலின் பிராங்கோ, கரன்பாக்கர், செல்வி டியற்றி, விடுதலைப் புலிகளின் சர்வதேச செயற்பாட்டாளர் திரு.சிவா ஆகியோரின் உரைகளிலும் இக்கருத்துக்களே ஓங்கியொலிக்க காணப்பட்டன.

**மலையையும் அசைக்கும்; தடைகளை உடைக்கும்; உலகத்தை எம்பக்கம் திருப்பும்; அடுத்த நூற்றாண்டு எமக்குத்தான் என்னும் நம்பிக்கையைத் தரும் என்பதை திரண்டிருந்த மக்களின் மனவுறுதியில் காணமுடிந்தது**

ஐரோப்பிய நாடுகள் தம்மை ஒன்றியமாக இணைத்துக் கொண்டு எப்படிப் புதுவலு பெற்றனரோ அப்படியே ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழீழ மக்களும், 21–ம் நூற்றாண்டை நோக்கி தமிழீழம் என்ற கோரிக்கையை முன்வைத்து அணிதிரண்டனர். தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்களின் உருவப் படத்தை முன்னணியில் தாங்கியபடி சென்ற மக்கள் தேசியத் தலைவரின் படம் பொறிக்கப்பட்ட தொப்பி அணிந்து, தமிழீழத் தேசியக் கொடியை ஏந்தியபடி தமது தேசத்தின் விடிவிற்காக குரல் கொடுத்து சென்ற எழுச்சிப் பேரணி சாதாரணமான விடயமல்ல; அது மலையையும் அசைக்கும்; தடைகளை உடைக்கும்; உலகத்தை எம்பக்கம் திருப்பும்; அடுத்த நூற்றாண்டு எமக்குத்தான் என்னும் நம்பிக்கையைத் தரும் என்பதை திரண்டிருந்த மக்களின் மனவுறுதியில் காணமுடிந்தது. ■







தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாங்குளம் பாதை தொடர்பாக படைத்தலைமை விதிக்கும் நிபந்தனை!

**விடுதலைப் புலிகள் ஆனி _ ஆடி 1999 இதழில் வெளியான கட்டுரை**

26.06.99 அன்று படையினர் நடாத்திய ரணகோஷ –4 படையெடுப்பைத் தொடர்ந்து, பள்ளமடு போக்குவரத்துப் பாதையை இராணுவம் மூடியது.

இதன் பின்னர் புதிய பிரயாணப் பாதைக்காக இராணுவத் தலைமை அறிவித்த மூன்று மார்க்கங்களில் முக்கியமானதான மாங்குளம் ஊடாகச் செல்லும் வவுனியா – யாழ் சாலையை புலிகள் தாமதமின்றி ஏற்றுக்கொண்டு ஐ.சி.ஆர்.சி ஊடாக அரசுக்கு அறிவித்தனர்.

புலிகளின் பதிலைப் பெற்றுக் கொண்ட இராணுவத் தலைமை முதலில் மௌனம் சாதித்தது. சில நாட்களின் பின்னர் மாங்குளம் பாதை திறப்பிற்காக நிபந்தனை ஒன்றை விதித்தது. படையினர் நிலை கொண்டுள்ள முன்னரங்கிலிருந்து ஐந்து கி.மீற்றர் நீளமும் ஒரு கி.மீற்றர் அகலமுமான புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை இராணுவ சூன்

## தமிழ் மக்களுக்கான போக்குவரத்து ஏற்பாடா! படையினரின் இராணுவ நலனுக்கான சூழ்ச்சியா!



யப் பிரதேசமாக புலிகள் ஏற்றுக் கொண்டு – தமது காவல் அரண்களை பின்னுக்கு நகர்த்த வேண்டும் என நிபந்தனையிட்டனர். இந்த நடவடிக்கைக்கு ‘தமிழ் பிரயாணிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடு’ என்று படையினர் விளக்கமளித்தனர்.

1990 ஜூனில் இரண்டாம் ஈழப் போர் ஆரம்பமான நாளிலிருந்து பள்ளமடு பாதையை படையினர் மூடிய நாள்வரை இராணுவத்தின் முன்னரங்க நிலைகளுக்கும் புலிகளின் முன்னரங்க நிலைகளுக்கும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இடையேயான பகுதியூடாகவே போக்குவத்து நடைபெற்று வந்தது.

ஆரம்பத்தில் இராணுவ சூன்யப் பகுதி என்ற ஒன்று இல்லாமலே போக்குவரத்துப் பாதை இருந்தது. அதன் பின்னர் இருபகுதி நிலைகளுக்குமிடையே இருந்த பகுதி இராணுவ சூன்யப் பகுதியாக இரு பகுதியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு போக்குவரத்து இடம்பெற்றது.

ஆனால் இத்தனை கால வழமைக்கு மாறாக பெரும் பகுதி நிலத்தை அதுவும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியை விட்டு புலிகள் பின்வாங்கி அந்த நிலத்தை இராணுவ சூன்யப் பிரதேசமாக அறிவிக்கவேண்டும் என்று சிங்கள இராணுவத் தலைமை வலியுறுத்துவதில் ஒரு சூழ்ச்சியே அடங்கியுள்ளது.

ஒன்றரை வருடகாலமாக முயன்றும் மாங்குளத்துடன் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டு வவுனியா –யாழ் பிரதான வீதியை கைப்பற்ற சிங்கள படைத்தலைமை செய்யும் இராணுவ

# சூழ்ச்சிகளை வெல்லுமொரு விதிசெய்வோம்

சூழ்ச்சியின் முதற்கட்டமான 5 கி.மீற்றர் நீள இராணுவ சூன்யப் பகுதி என்ற நிபந்தனையாகும்.

65 கி.மீற்றர் நீள வவுனியா – கிளிநொச்சி வீதியைக் கைப்பற்ற ஜெயசிக்குறுய் என்ற பெயரில் சிங்களப்படைகள் முயன்றன. எனினும் ஏறக்குறைய 550 நாள் முயற்சியில் ஆக 35 கி.மீற்றர் நீள பாதையை மட்டுமே (மாங்குளம் வரை) சிங்களப் படையினரால் கைப்பற்ற முடிந்தது. இந்த 35 கி.மீற்றர் நீளப் பாதையைக் கைப்பற்றும் சண்டைகளில் 3000 படையினரை சிங்கள அரசு இழந்தது. சுமார் 7000 படையினர் படுகாயமடைந்தனர். சுமார் 600 கோடி ரூபாய் பெறுமானமுள்ள இராணுவத் தளபாடங்களை சிறீலங்கா இழந்திருந்தது.

இந்த இழப்பு விபரத்தை வேறு ஒரு வகையில் சொல்வதானால் ஒரு கி.மீற்றர் நீளப் பாதையைப் பிடிக்க 15 நாள் முயற்சியுடன் சுமார் 85 படையினரைப் பறிகொடுத்து ஏறக்குறைய 200 படையினரைப் படுகாயத்திற்குள்ளாக்கி சுமார் 15 கோடி ரூபாயை செலவழித்து, என்ற ரீதியில் ஜெயசிக்குறுய் படையினர் விலை கொடுத்திருந்தனர்.

எனினும் ஜெயசிக்குறுய் காலகளயதார்த்தம் வேறு, இன்றைய களநிலை வேறு.

ஜெயசிக்குறுய் சமரின் பின்பகுதியில் புலிகளின் மரபுப் போர் வலு மிகச் சிறப்பாக வளர்ச்சிகண்டிருந்தது. இதற்கு உதாரணமாக மாங்கு

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளம் பேரூரைக் கைப்பற்றுவதற்கு சிங்களப் படைத்தரப்பு எடுத்துக் கொண்ட காலமும் – இந்தக் காலப் பகுதியில் அது சந்தித்த உயிர் மற்றும் படைக்கல இழப்பும் சுட்டிக்காட்டத் தக்கது.

மாங்குளம் சந்திக்கு முன்பாக ஏறக்குறைய மூன்று கி.மீற்றர் தூரத்தில் நிலைகொண்டபடி சுமார் ஒரு வருட காலம் சிறீலங்காப் படையினர் பாரிய முயற்சி பலவற்றை எடுத்து – பெருமளவு இழப்புக்களைச் சந்தித்த பின்பே மாங்குளத்தைக் கைப்பற்றினர். அதுவும் கிளிநொச்சி நகரை மீட்க புலிகள் மாபெரும் தாக்குதலை தொடுத்திருந்த புறச் சூழலிலேயே மாங்குளத்தைக் கைப்பற்ற சிங்களப் படையால் முடிந்தது.

மாங்குளத்திற்கு அப்பால் பிரதான வீதி வழியே ஒரு அங்குல நிலத்தைத் தானும் கைப்பற்ற முடியாத சூழலிலேயே ஜெயசிக்குறுய் நடவடிக்கையை சிறீலங்காப் படைத்தலைமை கைவிட்டது. எனினும் வவுனியா – யாழ் சாலைமீது சிங்களப்படைத் தலைமைக்கு ஒரு கண் இருந்தது. மாங்குளம் ஊடாக ஒரு போக்குவரத்துப் பாதை திறப்பது என்ற நிலை எழுந்தவுடன் தனது நிறைவேறாத இராணுவ ஆசையை நிறைவேற்ற சிங்களப் படைத்தலைமை சூழ்ச்சி செய்கின்றது.

மாங்குளத்திலுள்ள தனது முன்னரங்கத்திலிருந்து 5 கி.மீற்றர் தூரத்தை இராணுவ சூன்யப் பகுதியாக மாற்றுவதில் சிறீலங்காப் படைகள் வெற்றி பெற்றால் சிறீலங்காப் படைக்கு ஒரு பாரிய இராணுவ வெற்றியாக அமைந்துவிடும்.

தருணம் வரும்போது சந்தடியின்றி இந்த இராணுவ சூன்யப் பகுதியூடாக படையினரை நகர்த்தி மிகச் சுலபமாக யாழ் – வவுனியா சாலையில் 5 கி.மீற்றர் நீளத்தைக் கைப்பற்ற படைத் தலைமை சதி செய்கிறது.

உடன்பாட்டை மீறி இராணுவ சூன்யப் பகுதிக்கூடாக படை நகர்த்த படைத் தலைமைக்கு அதிக நேரம் பிடிக்காது. அதுபோல போக்குவரத்துக்காக குழுமி நிற்கும் மக்கள் மீது குண்டுமழை பொழிந்தபடி முன்னேறி நிலம்பிடிக்க சிங்களப் படைகள் அஞ்சாது. முன்னைய போக்குவரத்து மையமான தாண்டிக்குளம் ஊடாக





ஒரு படை நகர்வை சிங்கள இராணுவம் செய்ததை இங்கே நினைவூட்ட விரும்புகிறோம். அதுபோல அண்மையில் பள்ளமடுப் பகுதியில் போக்குவரத்துக்காகக் காத்திருந்த மக்கள் மீது எறிகணைத் தாக்குதல்களை நடாத்திக் கொண்டு முன்னேறிய ரணகோச 4 படை நடவடிக்கையும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

தனது இராணுவ நலனை அடையும் களமாக மக்களின் போக்கு

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சூழ்ச்சிகளை வெல்லுமொரு விதிசெய்வோம்

வரத்து மார்க்கத்தைப் பயன்படுத்துவது சிங்களப் படைத்தரப்பின் வழமை என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்நிலையில் போக்குவரத்துப் பாதைக்காக சிங்களப் படைத் தலை





மையின் நிபந்தனையை ஏற்று சிங்களப் படையினருக்கு ஒரு பாரிய இராணுவ வெற்றியை வழங்கி போராட்டத்தை நெருக்கடிக்குள்ளாக்குவதா?

அல்லது, அவ்விதம் செய்யாது தவிர்த்துவிட்டு அதற்கு விலையாக ஒரு வாழ்வியல் நெருக்கடிக்கு முகம் கொடுக்க வன்னி மக்களைத் தயார் படுத்துவதா? என்ற இரண்டிலொரு நிலையே தீர்வாகவுள்ளது.

பொருட்களின் வருகைக்கான, மக்களின் பிரயாணத்திற்கான போக்குவரத்து ஏற்பாடு என்பது வன்னி வாழ் மக்களின் ஜீவனோபாயத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. இந்த ஜீவனோபாய வலயத்தில் கைவைக்க சிங்கள அரசு சந்தர்ப்பத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

ஏதோ ஒரு கட்டத்தில் இன்றோ நாளையோ ஏதாவது ஒரு சாட்டைக் கூறிக்கொண்டு வன்னி மீது பூரண போக்குவரத்துத் தடையை சிறீலங்கா அரசு விதித்தே தீரும். நாளைக்கு அதை எதிர்கொள்வதைவிட இன்றே அதற்கு முகம்கொடுப்பது சிறந்தது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* அதிகரித்துச் செல்லும் உலக சனத்தொகையினால் ஏற்பட்டுவரும் உணவு நெருக்கடிக்கு எவ்வாறு தீர்வு காண்பது?
* புற்றுநோய், எயிட்ஸ் போன்ற உயிர்கொல்லி நோய்களிலிருந்து மனித இனத்தை எவ்வாறு பாதுகாப்பது?
* சூழல் மாசடைதல் _ அதனால் மனித குலம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு என்ன?

மரபலகுகளே ஒவ்வொரு உயிரினத்தினதும் புறத்தோற்றம், நடத்தை உட்பட சகலவற்றையும் தீர்மானிக்கின்றன என ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

உயிரினங்கள் அனைத்தும் வேறுபட்ட எண்ணிக்கையிலான கலங்களால் ஆக்கப்பட்டவை. கலம் ஒவ்வொன்றினுள்ளும் கரு அமைந்திருக்கும்; கருவினுள் பலவகைப் புரதங்களால் ஆக்கப்பட்ட நிறமூர்த்தங்கள் (அல்லது குரோம சோம்கள்)

# மரபலகு

## ஓர் அறிவியற் புரட்சி

20–ம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்திலுள்ள மனிதன் சந்தித்து நிற்கும் / 21–ம் நூற்றாண்டிலும் எதிர்கொள்ளவுள்ள முக்கிய கேள்விகள் இவை.

இவற்றுக்கு தீர்வுகாண முடியுமா? என்ற கேள்விக்கு ஆம்! என்ற பதிலை "மரபியல்" அறிவியலாளர்கள் மிகுந்த நம்பிக்கையுடன் வழங்குகின்றனர்.

உலகில் உயிரினங்கள் எவ்வாறு தோன்றின? அவற்றின் நடத்தைகளைத் தீர்மானிக்கும் காரணி எது? என்பன போன்ற கேள்விகளுக்கு விடைகாணும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட அறிவியல் ஆராய்ச்சிகள், இவற்றுக்கான விடைகளைக் காண்பதில் பெருமளவில் வெற்றி பெற்றுள்ளன. இந்த ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை மனித இனத்துக்கு நன்மை தரக்கூடிய வகையில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற கேள்விக்கு தற்போது அறிவியலாளர்கள் பதிலளித்து வருகின்றனர்.

இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் மனித குலத்தின் எதிர்காலத்தையே தீர்மானிக்கும் சக்தி வாய்ந்தவை என்பது அறிவியலாளரின் திடமான நம்பிக்கையாகும். இதனால், இந்த ஆராய்ச்சிகள் உலகளாவிய ரீதியில் தொடரப்பட்டு வருகின்றது.

'மரபியல்' தொடர்பான ஆராய்ச்சிகளில் 'ஜீன்' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் "மரபலகு" கண்டுபிடிக்கப்பட்டமை முக்கியமான ஒரு திருப்புமுனையாகும். இந்த உள்ளன. இந்த நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை வெவ்வேறு உயிரினங்களுக்கு வெவ்வேறாக இருக்கும் என ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக மனிதனுடைய கலங்களிலுள்ள கரு ஒவ்வொன்றிலும் 46 நிறமூர்த்தங்களும், எலியின் கரு ஒவ்வொன்றிலும் 42 நிறமூர்த்தங்களும் தக்காளியின் கருவினுள் 24 நிறமூர்த்தங்களும் காணப்படும்.

இந்த நிற மூர்த்தங்களுள் டி.என்,ஏ எனப்படும் புரதங்களாலான மிக நீண்ட சுருள் வடிவிலான இரட்டைக் குழாய்கள் சுருட்டி வைக்கப்பட்டுள்ளன. இக் குழாய்களின் நீளமும் உயிரினத்துக்கு உயிரினம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேறுபட்டே காணப்படுகிறது. இந்த டி.என்.ஏ க்குள் சங்கேத மொழியில் பதிவு செய்யப்பட்டுள்ள மரபுவழிக் குறியீடே "மரபலகு" அல்லது "ஜீன்" என அறிவியலாளர்களினால் அழைக்கப்படுகிறது.

இந்த மரபலகுகளில் காணப்படும் மரபு வழிக்குறியீடுகளுக்கு அமைய ஒவ்வொரு கலமும் தொழிற்படும்போது உயிரினங்களின் தோற்றம், நடத்தை என்பன வெளிப்படுகின்றன என அறிவியலாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். அதாவது இந்த மரபு வழிக்குறியீடுகள் சுட்டிக்காட்டும் கட்டளைக்கு இணங்கவே உயிரினங்களின் வடிவமும் செயற்பாடும் அமைவதாக கூறப்படுகின்றது.

இந்தக் கண்டுபிடிப்பு மனிதனுக்கு எவ்வகையில் உதவப்போகிறது?

முதலாவதாக அதிகரித்துச் செல்லும் உணவுத் தேவையை இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் ஈடுகட்ட முடியும் என மரபியல் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இதற்கான ஆராய்ச்சிகள் மூலம் பெறப்பட்ட விளைவுகள் ஏற்கனவே பயன்பாட்டிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

உதாரணமாக நெல் மற்றும் தானியவகை, மரக்கறி விதைகளுக்கு குறிப்பிட்ட அளவில் கதிர்வீச்சை செலுத்துவதன் மூலம் அதிக பயன்தரும் இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

அத்துடன் குறிப்பிட்ட தாவரத்தின் விதைக்குப் பதிலாக அதன் கலங்களிலிருந்து தாவரத்தை உருவாக்கி பயிரிடும் முறையும் பல நாடுகளில் பண்பாட்டுக்கு வந்துள்ளன. உதாரணமாக தென்னை மரத்திலுள்ள ஒவ்வொரு கலத்திலிருந்தும் ஒவ்வொரு தென்னை மரத்தை உருவாக்கி அவற்றைப் பயிரிட முடியும். இந்த முறையில் ஆரோக்கியமான கலங்கள் தெரிவுசெய்யப்பட்டு மரபுப் பொறியியல் முறை மூலம் கன்றுகள் உருவாக்கப்படுவதால் அவை நோய்த் தாக்கம் அற்றவையாகவும் உருவாக்கப்படும். கன்றுகள் யாவும் விரைவான, சீரான வளர்ச்சியுடையவையாகவும், கூடுதல் பயனைத் தருபவையாகவும் உள்ளன.

இந்த முறை மூலம் தாவரங்களின் தன்மைகளைக்கூட மாற்ற முடியும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக மரபுப் பொறியியல் மூலம் வெண்ணிறப் பருத்திக்குப் பதிலாக பல்வேறு நிறமுடைய பருத்தி உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் பருத்தி நூலுக்கு சாயமிடவேண்டிய அவசியமில்லாது போவதுடன் அவற்றின் மூலம் உருவாக்கப்படும் துணிகள் நிறம் மாறாதவையாகவும் அமைகின்றன.

கலங்களிலிருந்து தாவரங்களை மட்டுமல்ல ஆடு, மாடு, பன்றி போன்ற மிருகங்களும், குளோனிங் எனப்படும் முறை மூலம் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவை வழமையான இனப்பெருக்க மூலம் பெறப்படும் கால்நடைகளிலும் கூடுதல் பயனளிப்பவையாக உள்ளன.

இப்பொழுது மரபு பொறியியல் மூலம் கலப்பினங்களை உருவாக்குவதற்கான ஆராய்ச்சிகள் இடம்பெற்று வருகின்றது. இதில் முக்கிய அம்சமாக தாவரத்திலுள்ள பச்சையத்தை கால்நடைகளின் கலங்களிலுள்ள கருவுக்குள் பதிக்கமுடியுமா? என்பது குறித்து மரபு பொறியியல் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். இந்தப் பச்சையங்களே தாவரங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை சூரிய ஒளியிலிருந்து தயாரித்துக் கொள்கின்றன. இது சாத்தியமானால் கால் நடைகளும் தாவரங்கள் போல சூரிய ஒளியிலேயே உணவு தயாரித்துக் கொள்ளமுடியும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர். இதேபோல காற்றிலுள்ள நைதரசனை தாமாகவே பசளையாக்கிக் கொள்ளும் தாவரங்கள், அழுகாத மரக்கறி வகைகள், உப்பு நீரிலும் பயிரிடக்கூடிய நெல், நோயெதிர்ப்பு மருந்துகளை உருவாக்கக்கூடிய மரங்கள், மனித இரத்தத்தை உருவாக்கக்கூடிய புகையிலைச் செடி என்பன குறித்தும் ஆராய்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

**'மரபியல்' தொடர்பான ஆராய்ச்சிகளில் 'ஜீன்' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் "மரபலகு" கண்டுபிடிக்கப்பட்டமை முக்கியமான ஒரு திருப்புமுனையாகும்**

இவ்வாறான ஆராய்ச்சிகள் மூலம் 21–ம் நூற்றாண்டில் மனிதன் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்துகொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை மரபு பொறியியல் மூலம் மனிதனுக்கு வரும் நோய்களைத் தடுப்பதற்கான சிகிச்சை முறைகள் பல தற்போது கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

உதாரணமாக புற்றுநோய் தாக்கிய கலங்களை மரபலகு சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும் என அறியப்பட்டிருக்கிறது. அதாவது புற்றுநோய் தாக்கிய கலங்களிலுள்ள மரபலகுகளுக்கு பதிலாக புதிய மரபலகுகளை மரபுப் பொறியியல் மூலம் செலுத்துவதால் புற்றுநோயைக் குணமாக்க முடியும் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை மரபுப் பொறியியல் மூலம் நீரிழிவு நோய்க்கான மருந்துப் பொருளான இன்சுலினை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தயாரிக்க முடியும் என நிரூபிக்கப்பட்டுள்ளது. இங்கு வழமையாக மாடு, பன்றி என்பவற்றிலிருந்து பெறப்படும் இன்சுலினிற்குப் பதிலாக பக்ரீரியாக்களின் கலங்களில் மனிதனின் இன்சுலின் கலங்களிலுள்ள மரபலகை புகுத்துவதன் மூலம் இன்சுலின் தயாரிக்க முடிந்துள்ளது.

இன்று உலகை அச்சுறுத்தி வரும் சுற்றுச் சூழல் மாசடைதலைத் தடுக்க மரபு பொறியியல் பெரும் பங்காற்ற முடியும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

நிலத்திலும் நீர், காற்று என்பவற்றிலுமுள்ள மாசுக்களை அகற்ற மரபுப் பொறியியல் மூலம் உருவாக்கப்பட்ட பக்ரீரியாக்களை பயன்படுத்தமுடியும். உதாரணமாக நீரில் கலந்துள்ள எண்ணெய் படலத்தை அகற்றக்கூடிய பக்ரீரியாக்கள் கண்டுபிடிக்கப்பட்டு தற்போது அவை பாவனையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் நீரிலுள்ள மாசுப் பொருட்களையும் கூட இவ்வகையில் தயாரிக்கப்படும் உயிரினங்கள் அழிக்கக்கூடியவை யாக உள்ளன. இவற்றுக்கு மட்டுமன்றி மனிதன் அன்றாடம் எதிர்நோக்கும் வேறுசில பிரச்சினைகளுக்கும் மரபலகுகள் குறித்த ஆராய்ச்சி பயன்படுகிறது.

உதாரணமாக மனிதருக்கு பிறவியிலேயே ஏற்படும் பல கோளாறுகளைச் சரிசெய்ய மரபு பொறியியலைப் பயன்படுத்துவதில் மருத்துவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். அதற்கும் மேலாக ஒரு சிசு கருவில் இருக்கும் போதே அது ஆரோக்கியமுள்ளதாக – குறைபாடுகள் எதுவுமற்றதாக – உள்ளதா என்பதைக் கண்டுபிடிக்க டி.என்.ஏ பரிசோதனை சர்வசாதரணமாகச் செயற்படுகின்றது. இங்கு கருவிலுள்ள நிறமூர்த்தங்களின் எண்ணிக்கையை கணிப்பிடுவதன் மூலம் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

இதேவேளை தடையெதுவுமற்ற நிலையில் புரியப்படும் குற்றச் செயல்களில் குற்றவாளிகளை இனம்காண மரபலகு பரிசோதனைகள் பெரும் உதவியாக உள்ளன. மரபலகுகள் பெற்றோரிலிருந்து பரம்பரையாக பிள்ளைகளுக்கு கடத்தப்படுவதை அடிப்படையாகவும் கைரேகை போலவே டி.என்.ஏக்களும் தனிப்பட்ட ஒருவருக்கு பிரத்தியேக அமைப்பைக் கொண்டவையாக இருப்பதையும் அடிப்படையாக வைத்து பல குற்றச் செயல்கள் துப்புத்துலக்கப்பட்டிருக்கின்றன. இந்த டி.என்.ஏ பரிசோதனைகளின் நம்பகத் தன்மை நிரூபிக்கப்பட்டிருப்பதால் இப்பரிசோதனை முடிவுகள் உலகம் முழுவதும் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

## வேலவன்

'மரபியல்' மக்களுக்கு பெரும் நன்மை தரும் அறிவியலாக வளர்ந்து வருகின்ற அதேவேளை, இங்கும் அரசியலில் புகுந்து அதற்கு நேர்மாறான விளைவுகளை ஏற்படுத்தும் சாத்தியம் அதிகரித்து வருகின்றது. இந்த வகையில் இந்த ஆராய்ச்சியின் பெறுபேறுகள் அனைவருக்கும் கிட்டுமா? என்ற கேள்வி வலுவாக இப்பொழுது எழுகின்றது.

'மரபியல்' தொடர்பாக தற்பொழுது நடைபெறும் ஆராய்ச்சிகள் பலகோடிரூபா பணம் செலவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்குப் பணம் செலவிடக்கூடிய நிலையில் வறிய நாடுகள் இல்லை. இந்நிலையில் இந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வரும் அமைப்புகள் அவற்றைக் காப்புரிமை செய்து அவற்றை சொந்தமாக்கிக் கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

இதனால் ஆராய்ச்சியின் பெறுபேறுகள் பணமற்றவர்களுக்குப் போய்ச் சேரும் வாய்ப்பு குறைவடைந்து செல்கின்றது. உதாரணமாக அதிக பயன்தரும் தானியவிதைகளுக்கு ஏகபோக உரிமையாளராக ஒரு பல்தேசிய நிறுவனம் வருவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதனால் வறிய நாடுகளிற்கு இவை கிடைப்பது அரிதாகவே இருக்கும். அத்துடன் இந்த தானிய விதைகள் மூலம் பெறப்படும் உற்பத்தி அதிகமாக இருப்பதால் வறிய நாடுகளின் வழமையான உற்பத்திகளை இவற்றுடன் போட்டியிட்டு விற்பனை செய்யமுடியாத நிலை ஏற்படும் என பொருளியல் வல்லுனர்கள் எச்சரிக்கை செய்கின்றனர். இதனால் வறியநாடுகள் செல்வந்த நாடுகளுக்கும் பல்தேசிய நிறுவனங்களுக்கும் அடிமையாக வேண்டிய நிலை ஏற்படும் என எதிர்வு கூறப்படுகின்றது.

உணவுப் பொருட்கள் மட்டுமன்றி மருந்துப் பொருட்களுக்கும் இதே நிலையே ஏற்படும். தற்போது பாவனையிலுள்ள சிகிச்சை முறைகளுக்குப் பதிலாக நவீன முறைகள் புகுத்தப்படவுள்ளதால் அவை செலவீடு கூடியதாகவும் ஏழைகளுக்கு ஏணி வைத்தும் எட்டமுடியாத நிலை ஏற்படும். இதனால் ஒருபுறம் நோயற்ற ஆரோக்கிய சமுதாயமும் மறுபுறம் பசி, பிணி என்பவற்றால் பீடிக்கப்பட்ட அடிமைச் சமுதாயம் ஒன்றும் உருவாகும் நிலை ஏற்படலாம்.

இவற்றுக்கும் மேலாக இம்மக்களுக்கு அச்சுறுத்தலாக உருவாகப்போவது "மரபியல் ஆயுதம்" ஆகும். 2003–ம் ஆண்டளவில் மரபியல் ஆயுதம் உருவாக்கப்படும் சாத்தியம் உள்ளதாக இலண்டன் விஞ்ஞானிகள் சங்கம் அறிவித்திருக்கிறது.

அனைவரையும் கொல்லும் அணுகுண்டுகள், கட்டடங்களை விட்டு மனிதரை மட்டும் அழிக்கும் நியூத்திரன் குண்டுகள், உயிரியல் ஆயுதங்கள் என்பவற்றின் வரிசையில் மிகவும் ஆபத்தான ஆயுதமாக மரபியல் ஆயுதம் உருவாகவுள்ளமை நிச்சயமாகும்.

இதுவரை காலமும் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனிதர்கள் அனைவரையும் "சமமாக மதித்து" அழித்தது. ஆனால் மரபியல் ஆயுதம் குறிப்பிட்ட மரபலகுகளைக் கொண்டவர்களை மட்டும் "தேடி அழிக்கக்கூடிய" தாகும்.

உலகம் முழுவதும் அனைத்தின மக்களும் வாழ்கின்ற சூழ்நிலையில் அணு ஆயுதமும் உயிரியல் ஆயுதமும் "தம் இன" மக்களையும் சேர்த்து அழித்துவிடும் என்ற அச்சம் கொண்டுள்ள சக்திகள் "தேடி அழிக்கும்" ஆயுதம் ஒன்றை கண்டுபிடிக்க முயற்சி செய்கின்றன.

மனிதன் உயிரியல் அடிப்படையில் ஒன்றாக இருந்தாலும் நிறங்கள் வடிவங்கள் மாறுபடுவதற்கு மரபலகுகளிலுள்ள மாற்றங்கள் காரணமாகின்றன. இவ்வாறு பார்க்கும்போது உலகிலுள்ள மக்களை மரபலகு அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கமுடியும். அவையாவன; ககாஸியன் – வெள்ளை இனத்தவர் – மேற்கத்திய நாடுகளில் பெரும்பான்மையாக வாழ்பவர்கள்; மங்கலாய்டுகள் – மஞ்சள் நிறத்தவர் –கிழக்கு நாடுகளில் வாழ்பவர்கள்; நீக்ராய்டுகள் – கறுப்பினத்தவர்கள் – உலகின் ஏனைய பகுதிகளில் வாழ்பவர்கள்.

இந்த மூன்று பிரிவுகளுக்கும் இடையில் மரபியல் ரீதியாகவுள்ள வேறுபாடுகளை அடிப்படையாக வைத்து இந்த மரபியல் ஆயுதங்கள் தயாரிக்கப்படுவது சாத்தியமே என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த ஆயுதங்களை உற்பத்தி செய்ய முயல்கின்றவர்கள் யார்? எந்த மரபினருக்கு எதிராக இந்த ஆயுதங்களைப் பயன்படுத்தப்போகின்றனர்? என்ற கேள்விகள் எழுகின்றன.

உலகில் மக்களினம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வாகும் என எதிர்பார்க்கப்படும் 'மரபியல்' தொடர்பான கண்டுபிடிப்புகள் ஒருசில மரபினரை அச்சுறுத்தும் விடயமாக மாறும் சாத்தியமும் உள்ளமை மறுக்கமுடியாத விடயமே ஆகும். ■

# விழுதெனப் பற்றும்

முல்லைக் கமல்



என் கோயில் பெருவெளியில்  
அது நிகழ்கிறது.  
செவிப்பறையைப் பிளக்கிறது போர்ப்பறை  
முழக்கம் இடி மின்னல் எல்லாமும் —என்  
கோயில் பெருவெளியில்...  
ஊழியை என்னுள் உதைத்து விரட்ட  
உடுக்கை அடிக்கிறது நெஞ்சறை  
சுதந்திர தேவி கருவறையில்  
திரைச்சேலை அவள் முன்னால் இப்போது இல்லை  
எனினுமவள் சுதந்திரமாயில்லை — என்  
கோயில் பெருவெளியில் அது நிகழ்கிறது — அவளை  
மானசீகமாய் மனத்தில் இருத்திவிட்டு  
மேலெழும் போர்த்தியில்....  
தீக்குளிப்பு நடக்கிறது — அவளை(ப்)  
பக்தித்தோர் பரவசமாய்..  
வெற்றி நிச்சயம் எமக்கே  
நிஜத்தை நெஞ்சில் இருத்தி நீள்கிறது  
அவர் நேர்த்தி.  
உதிராபிஷேகம் அங்கப் பிரதிஷ்டை  
நேத்திக் காவடிகளின் திசை (தீ) யாக உயிர்ப் பூக்கள்  
அவளைப் (ப்) பக்தித்தோர் பரவசமாய்..  
நிமிர்ந்து நிற்கிறது அவர் நெஞ்சுரம் — என்  
கோயில் பெரு வெளியில் அது நிகழ்கிறது.  
அவரைத் தாண்டி வர அதுவும் இயலாது  
வெற்றியை மட்டுமே அவர்கை  
விழுதெனப் பற்றும்  
மண்ணை மனத்தில் மானசீகமாய் இருத்திவிட்டு  
பக்தித்தோர் பரவசமாய்..  
என் கோயில் பெருவெளியில் அது நிகழ்கிறது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எதிர்கொள்ளும் வாழ்வு

நீலநிற மேலுறையால் அமைக்கப்பட்ட கூடாரம் ஒன்றின் கீழ் தரையில் பாய் விரித்து உடல் வைக்கப்பட்டிருந்தது. அது தன் வாழ்க்கை போலியாக முடிந்த ஒரு மனித உடல், அது டானியல். டானியலின் உடலை சூழ ஒரு சிறுமி. இரு சிறுவர்கள் இருந்தனர். அவர்களுக்கு அழப் பலமிருக்க வில்லை. விம்மியபடியே இருந்தனர். மூவரும் டானியலின் செல்வங்கள். அத்துடன் ஒரு வயதான அம்மா. அது டானியலின் மனைவியின் தாய். அங்கே ஓர் ஆண் உறுப்பினர், டானியலின் மனைவியின் அப்பா, ஒரு சோகமான பொழுது அங்கு காணப்பட்டது. ஒரு சாவு வீட்டில் இருக்கக் கூடிய சோகம் அவர்களிடம் இருந்தபோதும் வேறு எவரும் காணப்படவில்லை.

இந்த வேளையில் கூட்டமாக சிலர் வந்து சேர்ந்தனர். அவர்கள் டானியலின் மைததுனர் தொழில் புரியும் இடத்தில் ஒன்றாக தொழில் புரிபவர்கள். நட்புக்காக வந்து துக்கம் விசாரித்து அனுதாபம் சொல்ல வந்தவர்கள். டானியலின் மைத்துனர் இன்னும் வரவில்லை. தற்போதைய நிலையில் டானியலும் எதுவுமற்ற வெறுங்கை. அவன் மைத்துனர் மாதச் சம்பளம் எடுக்கும் குடும்பத்தவ . எனவே இறுதிச் சடங்கு செய்துமுடிக்கும் பொறுப்பு டானியலின் மைத்துனரையே சார்ந்தது.

டானியல் வேறு எவரிலும் தங்காது தானாகவே சுயதொழில் செய்து சீவியம் நடத்தியவர். பிறந்த இடம் மயிலிட்டி. வாழ்ந்த இடம் மயிலிட்டி. ஊரோடு, உறவோடு, மகிழ்வோடு, கடல் அன்னையின் கொடையைப் பயன்படுத்தி வாழ்ந்தவன். டானியலுக்கு சொந்தமாகவே வலை, வள்ளம் இருந்தது. வேறு ஆட்களும் வேலைக்கிருந்தனர். டானியல் மனைவியுடனும், ஐந்து பிள்ளைகளுடனும் வாழ்ந்து வருங்கால் நாட்டில் குழப்பநிலை தோன்றியது. கடலை நம்பியே வாழ்ந்தவர்கள் பிணமாக கரையொதுங்கும் காலம் வந்தது. டானியலின் நண்பர்கள், சில உறவுகள் பிணமாக ஒதுங்கினர். சிலர் காணாமல் போயினர். பிணங்களில் சூட்டுக் காயங்கள், வெட்டுக்காயங்கள் காணப்பட்டன. வாழ்வதற்கு வழிகாட்டிய கடல் அந்நியமாய்ப்போனது. கடலிற்குள் செல்வதற்கு எல்லோருமே பயந்தனர். உழைக்கும் நிலைபோய் தொழிலற்ற நிலை வந்து சேர்ந்தது. இன்று தீரும் நாளை தீரும் என்று பார்த்தால் 'ஷெல்' தாக்குதல்கள் அதிகரித்தன. ஒரு நாள் மாலை விமானங்களும் வந்து குண்டுகள் பொழிந்தன. இனி இங்கிருப்பது ஆபத்தானது என எண்ணி குடும்பத்தை இரவோடிரவாக வேறு இடம் கூட்டிச் சென்றான் டானியல். கையில் கொண்டு செல்லக் கூடிய பொருட்களுடன் சென்றவன் காலையில் வீடுநோக்கிச் செல்ல ஆயத்தமானான். ஆனால் அவன் ஊரவர்கள் தலையில் சுமைகளுடன் சமையல் பாத்திரங்கள், பொருட்கள் சகிதம் வருவதைக் கண்டவன் விசாரித்தபோது ஊருக்குள் அரச சீருடையினர் நிற்பது தெரியவந்தது. இனி ஊரை சிந்தித்து பயனில்லை என்ற முடிவில் வந்த இடம் வாழ்விடம் ஆனது.

ஊரை விட்டு வந்தோம். ஆனால் உடல் விட்டு பசி போகவில்லை. உழைத்தால் தான் தன் குடும்பம் வாழும் என்ற நிலை. வருமானம் பெற கூலிவேலை. விறகு கட்டுதல் போன்ற எல்லா தொழிலும் செய்தான் டானியல். ஆரம்பத்தில் இவை எல்லாம் கஷ்ரமாக இருந்தாலும் நாளடைவில் பழக்கமாகிவிட்டது. ஊரில் எவ்வளவு பனைகள், விறகுக்கு வளவுப்பனைகளே போதும். ஒருமுறை அயலில் ஒருவரின் பனைக்குள் பனம்பழம் எடுத்ததற்கு நடந்த சண்டை இப்போது அவன் கண் முன் வரும். வேலிக்குச் சண்டை பிடித்தோர் எத்தனைபேர். ஒரு நொடியில் ஓடிவந்துவிட்டோம். இப்போது யார் அனுபவிக்கிறார்களோ? கேட்கவோ பார்க்கவோ




ப.லிங்கநாதன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆளில்லை. எங்கள் வாழ்வு குறுகிய நோக்குடன் இருந்ததே தவிர பரந்திருக்கவில்லை. அவ்வாறு இருந்தால் இன்று இந்த நிலை வந்திராது. காலம் கடந்த சிந்தனை ஆனாலும் பயனில்லை என்று நினைத்து தன் குடும்பத்தைக் காப் பாற்ற வேண்டும் என்றும் அல்லும் பகலும் கஸ்ரப்பட்டான் டானியல். இடப்பெயர்வு என்று ஒரு சொல்லில் முடிக்கிறார்கள் அதன் பின் விளைவு பசி, பட்டினி, நோய், இருப்பிடம் இன்மை இது எல்லாம் அனுபவிக்கும் போதே தெரிகிறது.

இடம்பெயர்ந்து வந்து இப்போது ஓரளவு குடும்பம் சீரான வாழ்வு வந்து அன்றாட வாழ்க்கை பிரச் சினை இன்றி வர, மீண்டும் வந்தது இடப்பெயர்வு ஒரே இரவில் கிடைத்ததை தூக்கிகொண்டு யாழ் மக்கள் தென்மராட்சி நோக்கி நகரத்தொடங்கினர். தூக்கிச் சென் றது பொருட்கள் மட்டுமல்ல நோயுற்ற தாய் தந்தையர் கைக்குழந் தைகள், இறந்தவர்கள் இப்படிப் பலர். அவர்களுடன் டானியல் குடும்பமும் தென்மராட்சி நோக்கி நகரத்தொடங்கியது. மக்களுடன் மக்களாக தென்மராட்சி வந்தடைந் தாயிற்று தங்க இடமில்லை, உண்ண உணவில்லை. வந்து சேர்ந்த அவ்வளவு சனத்தையும் எவ்வாறு சமாளிப்பது. பாடசாலை வளவு ஒன்றில் மரத்தின் கீழ் வாழ்ந்து கொண்டு அந்த முகாமில் வழங்கிய கஞ்சி அல்லது பாண் துண்டை நம்பி டானியல் குடும்பமும் வாழ்ந்தது.

இலவசமாக வன்னிக்கு கொண்டு சென்று ஆட்களை விடுவதாக கூறினர். இந்த நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்காக வன் னிக்கு வந்து சேர்ந்தது டானியல் குடும்பம். பாடசாலை ஒன்றில் தங்கவிட்டார்கள். வந்த மக்கள் தொகைக்கு தேவைப்படும் அளவிற்கு கட்டடங்களோ, இதர தேவைகளோ இருக்கவில்லை. மிகவும் நெருக்கடி யாக இருக்கும் நிலை. அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யவே மிகவும் கஸ்ரமான நிலை. பாடசாலையை முகாமாக்கி அங்கு மதியம் சோறு அல்லது கஞ்சி. காலையில் பாண் வயிற்றுக்கு போதுமோ இல்லையோ சகித்து வாழும் நிலையானது டானியல் நிலை. அதிகமான இடம்பெயர்ந்த மக்களுக்கும் இது பொருந்தும், தனியாக வெளியே சென்று வாழ விரும்புபவர்களுக்கு கிடுகு வீட்டு உபகரணங்கள் தடிகள் போன்ற வசதிகள் செய்து தரப்படும் என்று கூறப்பட்டது. டானியலும் விரும்பினான். தனியே சென்று சிறிய கொட்டிலமைத்து வாழ்ந்தான். நிவாரணம் மட்டுமே வாழும் வழியானது குடும்பத்துடன் வாழ்வதற்கு அது போதாது இருந்தாலும் என்ன செய்வது மனைவி பிள்ளைகளுடனாவது வாழுவோம் என வாழ்ந்தான். ஒருநாள் இரவு நிலம் அதி... ...கு அதிர்ந்தது.... குண்டு

விமானம் இரைந்தும் மீண்டும் குண்டு போடுவதாக உணரக்கூடியதாயிருந்தது. மக்கள் கூக்குரலிட்டு அல்லோலகல்லோ லப்பட்டனர். விமானம் சென்று சத்தம் அடங்கியது. டானியல் தன் குடும்பத்தவரை தேடினான். இருட்டில் தட்டுத்தடுமாறி தேடினான். விளக்கின்றி ஒவ்வொரு வராக கூப்பிட்டுத் தேடினான். ஆனால் இரண்டாவது மகனைக் காணவில்லை. எங்கே? அவன் எங்கே? கால் ஈரம்படுவது போன்று உணர்வு. எதுவோ தட்டுப்பட்டது. 'விளக்கை கொளுத்துங்கோ' தூக்கினான், பார்த்தான் அவன் இவ்வுலகைப் பிரிந்து சென்றுவிட் டான். விமானத்தின் குண்டுப் பசிக்கு டானியல் மகன் இரையா னான். அழுகை, குடும்பமே அழுதது. மனைவி அழுதாள், பிள்ளைகள் அழுதார்கள். இதுவரை இழந்தது பொருட்களை, சொத்துக்களை இன்று உயிரும் ஒன்று பறிபோயிற்று. ஊர், உறவு எல்லாம் இழந்தவர்கள் அழுது என்ன பயன். மகனின் உடல் இறுதிச் சங்கு முடித்து புதைக்கப்பட்டது. இனி இங்கே இருக்க மனைவி பிள்ளைகள் விரும்பவில்லை. சொந்த இடம் விட்டு புறப்பட்டாயிற்று இனி எங்கிருந்தால்தான் என்ன என்ற முடிவில் டானியலும் சம்மதித்தான். அங்கிருந்து சுதந்திரபுரம் சென்று அங்கே ஒரு இடத்தில் குடிசை அமைத்து வாழ்க்கையை தொடர்ந்தார்கள்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவியழகன்

# நியதிகளின் நிர்ப்பந்தம்

மனிதகுல வரலாற்றில் எல்லா காலகட்டங்களிலும் வெவ வேறு சமூகங்களாகவோ இனங்க ளாகவோ பிரதேசங்களாகவோ தனி அலகாக தனித்துவத்தை கண்ட மனி தன் தனக்கே உரிய வாழ்க்கை முறை களையும் ஒழுங்குகளையும் வகுத்தே வந்துள்ளான். இதன்படி எல்லோ ரும் ஒழுகவேண்டும் என்பதே வாழ்க் கையின் நியதியாகியது. இந்த நியதி கள் தான் மக்களை ஒரே வழியில் நெறிப்படுத்தின. ஆனால் இவ்வா றான ஒழுங்கு முறைகளும் விதிகளும் சமூகத்தின் தேவைக்கேற்பவும் சூழ லுக்கேற்பவுமே அக்காலகட்ட மனித அறிவியல் தளத்திலிருந்து உருவாகி யவை. இதுமட்டுமல்லாது அரச, பேரரச உருவாக்கங்கள் ஆக்கிரமிப்பு உணர்வை மேலோங்கச் செய்ததால் ஆள்பவன் தனது நலனின் பொருட்டு ஆளப்படுவோருக்கான வாழ்க்கை முறைகளையும் விதிகளையும் வகுத் தான். இவையும் மக்களின் வாழ்க்கை நியதிகளாக உருக்கொண்டன. இவ வாறான நியதிகள் எல்லாமே மதம் சார்ந்த கோட்பாடுகளாகவே அர்த் தம் கற்பிக்கப்பட்டன. இவ்வாறான நியதிகளின் அடிப்படையில் அமைந்த வாழ்க்கை முறையே கலாச்சாரம் ஆகியது. இவை வாழ்வில் ஏற்படுத் தும் தாக்கங்கள் விளைவுகள் பற்றி ஆய்ந்து அறிவது எமது வாழ்வை நெறிப்படுத்த வழிகோலும்.

ஒரு சமூகத்தின் குறிப்பிட்ட கால கட்டத்தின் தேவைக்கேற்ப அக்கால கட்ட மனித அறிவியல் தளத்தில் இருந்து உருவாகிய நியதிகள் எக் காலத்திற்கும் எந்த சூழலிற்கும் பொருந் தும் சிரஞ்சீவித்தன்மை கொண்ட தாக இருக்கமுடியாது. உலகில் உள்ள அனைத்துமே இடையறாத மாற்றத் துக்கு உட்பட்டே வருகின்றன. நிரந் தரமானதென்று எதுவுமே இருக்க முடியாது. இது இயங்கியல் அடிப்

> பழைய பிற்போக்கான நியதிகளை உடைத்தெறிந்து எழுச்சி கொள்ளும் எமது சிந்தனை வீச்சு சுதந்திரமான, சமத்துவமான, கௌரவமான வாழ்வை படைக்க வேண்டும்.

படை. இன்று எங்கோ உயர்ந்து வளர்ந்துவிட்ட அறிவியல் தளத்தில் வாழும் மனிதனுக்கு பல நூற்றுக் கணக்கான ஆண்டுகளின் முன்பு உருவாக்கப்பட்ட நியதிகள் அவனின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமா? இவை மனித வாழ்விற்கு முட்டுக் கட்டையாகவும் இடையூறுகளாக வும் புதிய வீச்சுடன் வாழ்வை சிருஷ் டிக்க மறுப்பதாகவும் அமைந்து மனித வாழ்வை சீரழித்து விடுகின் றது. இவ்வகையான முரண்பாட்டை விளங்குவதற்கு ஒரு உதாரணத்தைக் கொள்வோம்: முன்பு ஒரு காலகட் டத்தில் மனிதன் நெருப்பை உருவாக் குவதற்கு மத்துக்குள் சில வகை மூலிகைகளைப் போட்டு கடைந்து நெருப்பை உருவாக்கினான். அதி லுள்ள கடினத் தன்மை காரணமாக அது தனது சக்திக்கு அப்பாற்பட் டது எனக் கருதி தெய்வங்களை வழி பட்டு, சில சடங்கு முறைகளைச் செய்த பின்பே மத்தைக் கடைந்து நெருப்பை உருவாக்கினான். இந்த நெருப்பைக் கொண்டே சமையல் செய்தான். இன்று Hot Plate –இல் சமைக்கும் மனிதனுக்கு சுவிட்சை அழுத்த முன்பு அன்றைய மனித னின் சடங்கு முறையை பின்பற்ற வேண்டுமென்பது எத்தனை மூடத் தனமானதோ அத்தகைய இன்றைய சூழலில் வாழும் மனிதனுக்கு பழைய நியதிகளின் அமைவு இருக்கப்போ கின்றது.

எமது தமிழ்ச் சமூகத்தில் உள்ள நியதிகள், கலாச்சாரம் என்ற போர்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வையிலோ அல்லது மத தர்மம் என்ற போர்வையிலோ ஆரோக்கிய மான வாழ்வைக்காண்பதற்கு என் றும் தடையாகவே அமைந்துள்ளது. சாதியம், பெண்ணியம் இன்றும் பிற்போக்கான சடங்குமுறைகள், மூடநம்பிக்கைகள் என்பவை தேசிய ஒருமைப்பாட்டிற்கும் சமத்துவமான வாழ்விற்கும், ஆரோக்கியமான சிந் தனைக்கும் தடையாகவே இருந்தது. பெண்ணியம் தொடர்பான சீதனம், உழைப்பு, மறுதிருமணம், சமூகப் பங்கெடுப்பு போன்றவற்றிற்கான எமது சமூக நியதிகள் சமூகத்தின் அனைத்து அங்கத்தவரின் வாழ்வை யும் சுமையைக்கியது. இவையெல் லாம் ஆக்கிரமிப்பாளருக்கு சாதக மாக எம்மை பலவீனமான நிலை யிலேயே வைத்திருந்தது. பிற்போக் கான நியதிகள் எம்மை ஆக்கிரமிக்க எம் வாழ்வியலில் நாம் இடம் கொடுத்ததன் விளைவு எதிரியின் ஆக்கிரமிப்புக்குள்ளாகி எம் வாழ்வு மறுக்கப்பட ஆளாகினோம்.

காலம் காலமாக கடத்தப்பட்டு வரும் இத்தகைய பிற்போக்கான நிய திகள் தவறான அர்த்தத்தோடு இப் போதும் சமூகம் எம்மீது திணிக்கி றது. அதற்கு எம்மைப் பழக்கப்ப டுத்த முனைகிறது. இதை உள்வாங்கி விட்ட நாம் புதிய வாழ்விற்கு தகுதி யற்றவர் ஆகின்றோம். எமது புதிய சிந்தனை மழுங்கடிக்கப்படுகிறது. என்றோ ஒரு காலகட்டத்தில், எவ ரினதோ தேவைக்காக, எவராலோ உருவாக்கப்பட்ட நியதிகளை இன்று எமது வாழ்வின் முறைகளாக ஏற் றுக்கொள்ளுமாறு சமூகம் எம்மை வற்புறுத்துகிறது. கலாச்சாரம் என்ப தற்கு தவறான விளக்கத்தைக் கொண் டிருக்கும் சமூகம் கலாச்சாரம் என் பதை பாரம்பரியம் என்கிறது. பாரம் பரியம் என்பது பழையதுதானே. பழைய முறைகள் தான் கலாச்சாரம் என்றால் அதன்படி நாங்கள் வாழ்வ துதான் சரியானது என்றால் நாங்கள் குரங்காக மாறுவதே சரியானது. மனிதன் தன் ஒவ்வொரு காலகட் டத்திலும் பாரம்பரியத்தைப் பேணி அதன்படி வாழ முனைந்திருந்தால் மனிதன் இன்று குரங்காகவே இருந் திருப்பான். இதற்காக கலாச்சாரம் பிழையானதென்றோ அப்படி ஒன் றில்லை என்பதோ பொருளல்ல. கலாச்சாரம் என்பது பழைய சிறப் புக்களைப் பேணியும், புதிய பொருத் தப்பாட்டை உள்வாங்கியும் இன்றைய சூழலிற்கேற்ப மனிதவாழ்வை நெறிப் படுத்தக் கூடியனவாக ஆரோக்கியத் துடன் அமைய வேண்டும். இத்த கைய, கலாச்சாரம் என்பதன் உள் ளடக்கத்தை உணர்ந்து கொண்டு வாழ்வு வழி நடத்தப்படவேண்டும். இதன் யதார்த்தத்தை உணராமல் இன்றைய உலகில் இவை சரியென் னும் மனநிலையோடு வாழ்வை அமைக்க முயல்பவர்கள் கருத்தியல் அர்த்தத்தில் ஒருவகையில் மனநோ யாளிகளே. நம் மனநோயாளிகள் என்று உணராமலேயே அவ்வாறு இருந்துவிடுகின்றோம்.

"மனிதர்களை உருவாக்கும் மதமே எமக்கு வேண்டும். வீரரை உருவாக் கும் கல்வியே எமக்கு வேண்டும். இதுதான் உண்மைக்கு உரைகல், உங் கள் உடலையும் அறிவையும் பலவீன மாக்கும் எதையும் விஷமென ஒதுக்கி விடுங்கள். அதில் உயிரில்லை அது உண்மையானதல்ல" இது சுவாமி விவேகனந்தரின் கூற்று.

இன்று எமக்கு தேவையானதெல் லாம் இதுதான், நாம் யதார்த்தத்தை புரிந்து கொண்டவர்களாக புதிய சிந்தனை வீச்சோடு ஆரோக்கியமான வாழ்வை வாழவேண்டும். சமூகத் திணிப்புகளில் இருந்து விடுபட்டு முற்போக்கான புதிய சிந்தனையை உருவாக்க வேண்டும். இன்றைய அறி வியல் தளத்தில் இருந்து முற்போக் கான சிந்தனையோடு, பழைய சிறப் புக்களை இனங்கண்டும் எமது தேவைக்கேற்ப பொருத்தமான புதிய பொருத்தப்பாடுகளை இணைத்தும் புதிய வாழ்வைக் காண விளைய வேண்டும். பழைய பிற்போக்கான நியதிகளை உடைத்தெறிந்து எழுச்சி கொள்ளும் எமது சிந்தனை வீச்சு சுதந்திரமான, சமத்துவமான, கௌர வமான வாழ்வை படைக்க வேண்டும்.

**கலாச்சாரம் என்பது பழைய சிறப்புக்களைப் பேணியும், புதிய பொருத்தப்பாட்டை உள்வாங்கியும் இன்றைய சூழலிற்கேற்ப மனிதவாழ்வை நெறிப் படுத்தக் கூடியனவாக ஆரோக்கியத்துடன் அமைய வேண்டும்.**

**நாம் யதார்த்தத்தை புரிந்து கொண்டவர் களாக புதிய சிந்தனை வீச்சோடு ஆரோக்கியமான வாழ்வை வாழ வேண்டும். சமூகத் திணிப்புகளில் இருந்து விடுபட்டு முற்போக்கான புதிய சிந்தனையை உருவாக்க வேண்டும்.**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலக்கியம்

க.சா. அரியநாயகம்



பொருளாதார வருவாயின் மீது ஏகபோக சொந்தங் கொண்டாடி அதனை தனதாக்கி வந்த முதலாளித்துவ சக்திகள் போலவே கலை இலக்கியத் துறையிலும் ஓர் ஏகபோக உறவை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தார்கள் அன்றைய உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இலக்கியமென்பது தனிமொழியாகவும், இதில் கிராமிய வாடை 'மலினப்படுத்தப்பட்ட' பேச்சுவழக்கு கலந்துவிடக் கூடாதென்பது இவர்களது நோக்கமாகவும் இருந்தது.

இதனால் அவர்கள் தமக்கென ஒரு வாழ்வியலையும், கீழ் மக்கள் அல்லது கிராமிய மக்கள் மற்றுமொரு பண்பாட்டுக் கோலத்தையும் பிரித்து வளர்த்துக்கொள்ள நேர்ந்தது. எவ்வளவு தான் அழுத்தமாக தமிழினத்தின் ஒருமைப்பாடு வலியுறுத்தப்பட்ட போதிலும் இரு வகை நடைமுறைகளே இருந்து வந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

# பிற்கால இலக்கியப் படைப்புகள்

பரதநாட்டியம், கர்நாடாக சங்கீதம் போன்றவை ஒரு சாராரிடத்திலும்; நாட்டுக்கூத்து, கிராமிய நடனம், நாட்டார் பாடல் மற்றும் பல கலாச்சார நிகழ்வுகள் கீழ் தட்டு மக்களின் அமைப்பிலிருந்தும் வளர்ந்தது.

பல நூற்றாண்டுகளாக வெளியார் ஆட்சியில் நாகரீக நடைமுறையில் இவர்கள் தம்மைத்தாம் பறிகொடுத்துச் சிக்கிக்கொண்ட போதிலும் தமிழரின் உயிர்த் துடிப்பு சாதாரண மக்களின் நெஞ்சங்களில் சாகாது நிலைத்தது குறிப்பிடத்தக்கது.

மொழியைப் பொறுத்தவரை பிற மொழிகளில் லத்தீன், சமஸ்கிருதம் பாளி போன்ற ஓதுவார் மொழியாக தமிழ் வளரவேண்டும், வாழவேண்டுமென்பது இவர்கள் அபிலாஷையாக இருந்தது. இதுவே இலக்கிய மரபாகவுமிருந்தது.

எனினும், பிற்காலத்தில் இக்கருத்துக்கு மாற்றாக எதிர்க் கருத்துகள் தமிழறிஞர்களால் முன்வைக்கப்பட்டன.

இலக்கியப் படைப்புகள் ஒரு சாராருக்காக ஒரு வட்டத்துக்குள் அடைத்துவிடமுடியாது. அது மக்கள் மயப்படுத்தப்படவேண்டுமென விரும்பினார்கள், எடுத்துரைத்தார்கள். இவர்கள் இதுபற்றிக் கூறுகையில்,

“வள்ளல்களும், புரவலர்களும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழைக் காத்த காலம் பழங்காலம். குடியரசில் தமிழைப் புரப்பார் குடி மக்களேயாவார். ஆதலின் அவர்கள் விரும்புவதாக இலக்கியம் அமைவதே சிறப்பாகும்" என்றும் இன்று செய்யுளிலும் இசைப்பாட்டிலும் எளிமை புகுந்துள்ளது. பொதுமக்கள் இலக்கியம் என்பது தமிழில் தொடர்ந்து விளங்கிக் கொண்டே வந்துள்ளது. ஆனால், தற்போது இலக்கியமென ஒருவகை எழுத்து பொது மக்கட்கும் கற்றோருக்குமிடையே ஒரு பெரிய பிளவை ஏற்படுத்தியது என்கிறார் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்.

இக் கருத்தினை மற்றும்பல தமிழறிஞர்கள் தமது உரைகளிலும் எழுத்தாக்கங்களிலும் வலியுறுத்தியுள்ளார்கள். அறிஞர்களான ராஜாஜி, கவிமணி தேசித விநாயகம் பிள்ளை, விபுலானந்த அடிகளார், சுப்பிரமணிய பாரதியார் போன்ற பலர். தமிழ் சாதாரண மட்டத்துக்கு எடுத்துச் சொல்லப்பட்டு வளர்க்கப்பட வேண்டுமென விரும்பினார்கள், வளர்த்துமுள்ளார்கள். ஒருசமயம் சென்னையில் நிகழ்ந்த தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் இக் கொள்கை வலியுறுத்தவும்பட்டது.

வெளிநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்தல் வேண்டும். இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழில் இயற்றல் வேண்டும். மாறாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை, திறமையான புலமையெனில் வெளி நாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்று பாடினார் பாரதியார்.

பாரதியாரின் இக் கருத்தை விபுலானந்த அடிகளாரும் பெரிதும் ஏற்றார். தாம் கற்றுத்தேர்ந்த ஆங்கிலத்தில் நற்பயன் தரும் கருத்துக்களை அடிகளார் தமது "ஆங்கில வாணி" என்ற கட்டுரையில் தந்துள்ளார் – என பேராசிரியர் க.கைலாசபதி கூறுவார்.

பொதுவாகப் பார்க்குமிடத்து புதிய கருத்துக்களை முன்வைத்து பெரியார்கள் பழமையை மறக்கவுமில்லை புதுமையை இடைமறிக்கவுமில்லை. அவர்கள் கூடவே சேர்ந்து புதிய கருத்துக்களுக்கு, புதிய மாற்றங்களுக்கு நீரூற்றி வளர்த்தார்கள்.

புதுக் கவிதையில் முதல்வன் என்ற பெயர்பெற்ற பாரதி, பாமரரும், வாய்பேசும் குழந்தைகளும் விரும்பிப்பாடும் பாடல்களை அழகு தமிழில் இனிய நடையில் தந்தான். அவன் காலத்தில் கொதித்த நீர் போல் எழுச்சி கொண்டு குதித்தெழுந்த தேசிய விடுதலைப் போரை; அவர் பாடல்கள் ஓங்காரஞ் செய்தன. அது மட்டுமல்லாது, தானும் அப்போரில் இரண்டறக் கலந்தார்.

'ஓர் உண்மையான பிறவிக் கலைஞன், ஓர் உண்மையான மக்கள் போராளியாகும்' என்ற ஓர் ஆங்கிலக் கருத்துக்கு இலக்கணமாகி நின்றனவன் புரட்சிக்கவி பாரதி. இதனால் அவன் எதிர் கொண்ட ஏழ்மையின் சம்மட்டி அடி கொஞ்சநஞ்சமல்ல.

பச்சைக் குழந்தைக்கு சன்மார்க்க வழி போதிப்பது தமிழர் பண்பு. பச்சைக் குழந்தையின் வீர அரும்பை முளையில் கிள்ளி வந்ததும் தமிழர் பண்பே... ஆனால் பாரதி சொன்னான்.

"…. பாதகம் செய்பவரைக் கண்டால் நீ
பயங்கொள்ளலாகாது பாப்பா,
மோதி மிதித்துவிடு பாப்பா
அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா"

என்று, பாரதியின் பாப்பா பாடல் அவர் தம் சிந்தனையை, வீரத்தை கூர்மைப்படுத்தியவை.

பாரதி தன் தேசத்தை மட்டும் பார்த்தானில்லை. கவியுள்ளம் ஒரு வட்டத்துக்குள் கட்டுப்படுவதுமில்லை. பிறநாடுகளில் அவதியுறும் மானிடரை, அவர்கள் நசுக்கப்படும், சுரண்டப்படும் கொடுமையை தன் பாடலிலே கொணர்ந்து, கண்டன முழுக்கமிட்டான். கொடுங்கோலன் சார் மன்னன் வீழ்ந்தபோது ருஷியப் புரட்சியைப் பார்த்து ஆஹா, ஓகோ என்று கைகொட்டிக்குரல் கொடுத்தான். அதுவே யுகப் புரட்சியின் ஆரம்பமென்றான்.

பாரதியின் மூன்று சகாப்த வாழ்க்கையில் தமிழ்த் தாய்க்கு சேர்த்து வைத்து அழகு பார்த்த இலக்கியச் செல்வம் பெரும் பொக்கிஷமாகவே விளங்குகிறது. ஆனால் அவன் சுமந்த

'ஓர் உண்மையான பிறவிக் கலைஞன், ஓர் உண்மையான மக்கள் போராளியாகும்' என்ற ஓர் ஆங்கிலக் கருத்துக்கு இலக்கணமாகி நின்றனவன் புரட்சிக்கவி பாரதி



வேதனைகளோ ஆயிரம். இருப்பினும் அவனது பூதவுடலைச் சுமக்க பதின்னான்கு பேர்கள் சேர்ந்தார் என்றால் சமூகத்தின் மூடத்தன்மை எந்த அளவுக்கு இருந்தது என்பதை சிந்திக்க முடியும்.

பாரதி புதுக்கவிதையின் ஊற்றுக் கண். அவன் சுவட்டில் அடிபிறளாது நடப்போர் இன்று பலநூறாகி விட்டனர். இது நம்பிக்கைக்குரிய ஒன்றாகும். பாரதிதாசன், கம்பதாசன், கண்ணதாசன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், தமிழன்பன், இரும்பொறை, இன்குலாப், அப்துல் ரகுமான் – இன்னும் பலரை பாரதியின் பாதையில் தரிசிக்கமுடிகிறது. இக் கவிஞர்கள் சிலரின் பாடல்கள் சினிமாப் பாடல்களாகவும் அன்று இடம்பெற்று இவர்களை மக்களுக்கு அறிமுகம் செய்தது.

இசை, கவிதைத்துறை இவ்வாறு வளர்ச்சியுற தமிழ்ச் சிறுகதை – நாவல்கள் (நெடுங்கதை) பெருமளவில் மக்களைக் கவர்ந்தன. வாசனை அறிவுள்ளோரிடையே இவைக்கு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எமது விடுதலைப் போராட்டம் கல்விக்குக் கவசமாக இருப்பதுபோல, கல்வியும் எமது போராட்டத்திற்குக் காப்பரணாக நிற்க வேண்டும்.

– தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

நல்ல வரவேற்பிருந்தது.

தமிழிலே கதைப்படைப்புகள் உருவாவதற்கு சில பிறமொழி வழிகாட்டலே காரணமாக இருந்தது. பிறநாட்டு இலக்கிய மேதைகள் கைக்கொண்ட சில உத்திகள், கதை நகர்த்தல் போன்றவை எமது படைப்பாளர்களால் நமது தேச சாயலில், பண்பாட்டுத் தளத்தில் ஆக்கம்பெற்றது.

முதன்முதலில் தமிழில் சிறுகதை படைத்த ஆசான் வ.வே.சு.ஐயர் அவர்களே என்று கருதப்படுகிறது. இவர் காலத்தில் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளை பாரதியார் தமிழில் தந்துள்ளார். ஐயர் அவர்களது எட்டுச் சிறுகதைகள் அடங்கிய "மங்கையர்க்கரசி காதல்" என்ற சிறுகதைத் தொகுப்பு வெளிவந்ததாக குறிப்புகள் கூறுகின்றன. இந்நூல் 1927–ல் வெளிவந்தது. ஐயர் அவர்கள் வாழ்ந்த காலம் 1881 – 1925 ஆகும்.

இதன் பின்னர் ஐயர் காட்டிய வழியில் 1925–களுக்குப் பின்னர் தமிழ்ச் சிறுகதை, நாவல்கள் புதிய வேகத்துடன் வெளியாகின. இதுபற்றி டாக்டர் அ.சுப்பிரமணியபிள்ளை சித்தூர் அரசினர் கல்லூரி ஆசான் அவர்கள் கூறுவதைப் பார்ப்போம்.

கு.ப.இராஜகோபாலன், பி.எஸ். இராமையா, பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், மௌனி, கல்கி ஆகியோர் சிறுகதையைக் களமாக்கி உத்தியிலும் கருப்பொருளிலும் தங்கள் தனித்துவத்தைப் பதித்துச் சென்றனர். நடுத்தர வர்க்கத்தினரின் வறுமையையும் பற்றாக்குறையையும் கருப்பொருளாகக் கொண்டு தமக்கேயுரிய நடையில் உள்ளத்தைத் தொடும் வகையில் கதையைப் படைத்துக் காட்டியவர் புதுமைப்பித்தன்.

இவ்வாறு குறித்த படைப்பாளர்கள் மணிக்கொடி பத்திரிகை மூலம் பிரபலமாகி தமது பெயர்களைப் பதித்ததோடு அல்லாமல் சமூக ஆய்விலும், மனிதரின் மனச்சலனங்களையும் தத்துவவிசாரணைகள் நிறைந்த பாத்திரங்களையும் அமைத்து ஓர் புதிய இலக்கியப் பரம்பரையை முதன்முதலில் தோற்றுவித்தார்கள்.

கவிதை வரிகளிலே உயிர்ப்பைத் தந்தவர் பாரதி. வசன நடையிலே – கதை நகர்த்தலிலே ஒரு வீறு நடையைத் தந்தார் புதுமைப் பித்தன். இந்த வகையில் அவருக்கு நிகர் அவரேயாகினார். பிரெஞ்சுக்கதை இலக்கியத்திலே மொபசான், பால்சாக் ஆகியோர் மனிதம் மாசடைந்து குப்பையாகிவிட்டபோது அதன் துர்நாற்றத்தை சுட்டிக்காட்டிய மாதிரி புதுமைப்பித்தன் தன் அமரத்துவப் படைப்புக்களிலே தர்மமும், பண்பாடும் தலைநிமிர்ந்து நிற்பதாகக் கூறப்படும் தமிழ்நாட்டிலே மனிதம் எவ்வாறு துஷ்பிரயோகமாகிறது என்பதை சித்திரங்களாக்கித் தந்தார். ஒரு பிடிச் சோற்றுக்காய், உடலை மறைக்க ஒரு துண்டுத் துணிக்காய் தமிழர் பண்பாடு விலை போவதை போலித்தனமாக இவற்றுக்கு திரை போடும் மாடிவீட்டு மைனர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காட்டினார். அத்துடன் நின்றாரா? வெள்ளையரின் ஏஜன்டுகளினால் சுவர்க்கம் என அழைத்து வரப்பட்ட இந்தியத் தமிழர்கள் இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில் எண்ணற்ற அவலங்களுக்கு முகங்கொடுத்து தேய்ந்து மடிந்துபோன வரலாற்றை தன் படைப்புகளிலே பதித்துக் கொண்டார். தோட்டங்களிலே மலேரியா நோய் பீடித்தவனை அடித்துத் தின்னும் புலியும் மலேரியாவினால் செத்து மடியும் என்பார்கள்.

"....பாதகம்
செய்பவரைக்
கண்டால் நீ
பயங்கொள்ளலாகாது
பாப்பா,
மோதி மிதித்துவிடு
பாப்பா
அவர் முகத்தில்
உமிழ்ந்துவிடு
பாப்பா"



மணிக்கொடிப் பரம்பரையின் தொடர் நீண்டுகொண்டே இருக்கிறது எனலாம். வல்லிக் கண்ணன், தமிழ் ஒளி, ரகுநாதன், ஜெயகாந்தன், சுந்தரராமசாமி போன்றோரும் மற்றும் சிலரும் இந்த வரிசையை அழகுபடுத்தி விரிவுபடுத்தினர்.

என்றாலும் இவர்கள் யாவரும் இந்திய சுதந்திரத்திற்கு முந்தியும் பிந்தியுமாக வாழ்ந்தவர்கள், வாழ்கின்ற இலக்கிய விற்பன்னர்களாகும். எனவே இந்திய விடுதலைபற்றி எத்தனை நூல்கள் வெளியாகியுள்ளன என்பது கேள்வியே. ■



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடியலுக்காய் விரைந்திடுவீர்

மா. ஆதவன்

செங்குருதியால்
அர்ச்சிக்கப்பட்ட தாயின்று
விலங்கொடிக்க
பரிதவிக்கிறாள்.
வல்லாதிக்கக் கோரப்
பிடியிலிருந்து
மீண்டெழ துடிக்கிறாள்.
கைகள் பிணைக்கப்பட்டு
கால்கள் உடைக்கப்பட்டு
வேதனையால் முனகிக்
கிடக்கிறாள்.
தம்பியரும் தங்கையரும்
தாயின் துயர் நீக்க மறந்து



வேடிக்கை பார்த்துக் கிடக்க
எதிரி ஆடும்
கோரத்தாண்டவத்தால்
குருதி ஆறாய் ஓடுகின்றது எம்
மண்ணில்
பூமித்தாய் செங்குருதியில் தோய்ந்து
இரத்தக்கண்ணீர் சொரிகின்றாள்.

இளையவனே!
தன் மானம் பெரிதென்று விரைந்து
தாய் மானம் காத்திடு.
அன்னையவள் அடிமை விலங்கொடிய
ஆர்ப்பரித்தெழு.
கொடியோரின் கொடும்பகை விலக
கொதித்தெழு.
மானத் தமிழன் மண்டியிடான்.
மார்பில் குண்டேந்தி
மடிவானென்று பறை சாற்று
மைந்தனே.

இளையவளே!
ஆசைக்கும் அழகுக்கும் போதைக்கும்
பிறந்தவளல்ல – என்று
புதுமைப்பெண்ணாய் சீறியெழு.
அடுப்பங்கரையும், அயலும் என்று
வாழ்ந்த
காலம் மலையேறி விட்டதென –
உலகிற்கு சாற்றுவி.
மானமிழந்து மண்டியிட்டு வாழ்வதை
விட
மண்ணிற்காய் மடிவது மேலென்று எழு
மகளே.
நீவிர் எழுந்தால் காலம் எமதாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Facilitaion and Mediation

ஜெயா

இடைவெளிவிட்டு இடைவெளிவிட்டு....
அடிக்கடி வீட்டில் சண்டைகள் நடக்கும்
ஏச்சுப் பேச்சில் சிறுகத் தொடங்கி..
பண்டம் பாத்திரம் நொறுங்கும் வரைக்கும்
சண்டை வலுக்கும்.

உழைக்கும் பணத்தில்
ஒரு தொகைபிடித்து
குடித்துக் கரைப்பது
ஐயாவின் பழக்கம்.
சிறுகச் சேர்க்கும்
பணத்தைக் கொண்டு
நல்லதை ஆக்கி
உண்ணத் தருவது
அம்மாவின் விருப்பம்.
இருவர் மனமும்
பிள்ளைகள் மீது
பரிவும் பாசமும்
நிறையக் கொண்டது.
ஏனோ இருவரும்
தமக்குள் மோதி
எமக்கு அதிகம்
கவலையைத் தருவர்.



சண்டை நடந்த ஓரிரு
நாட்கள் ஐயா
வீட்டில்
சாப்பிடமாட்டார்.
"சொக்கன்" கடையில் சோத்துப் பார்சல்
கட்டிவந்து
கோடியில் வைத்து மிண்டுவிழுங்கித் தண்ணீர்
குடிப்பார்.
அடுக்களை இருந்து வரிச்சுமட்டை இடுக்கால்
பார்த்து
கண்கள் பனிக்க அம்மா தவிப்பாள்.
ஓரிரு நாட்கள் அவளும் இதனால்
சாப்பிடமாட்டாள்.

"கொம்மா" ஏனாம் சாப்பிடவில்லை?
பரிவுடன் ஐயா எம்மிடம் கேட்பார்.


இருவர் மனத்திலும் ஈரம் அதிகம்
ஒருவர் நலனில் ஒருவர்க்கிருந்த அக்கறை
அதிகம்.
எனினும் ஏனோ நல்லவர் இருவரும் சண்டை
பிடிப்பர்.

இருநாள் விட்டு சூடுதணிய
சமரசம் செய்வதில் நாங்கள் இறங்குவோம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருவரை உருக்கி சமாதானம் செய்வதே
எங்களின் வேலை.
எங்களில் சின்னவன் இதனில் வல்லவன்.
ஐயாவின் கையை பிஞ்சுக்கையால் இழுத்து
வந்து..
அம்மாவின் கையில் ஆசையாய் இணைத்து..
சிறுவிரல் காட்டி ஏசுவான் சின்னவன்.
தீட்டிய திட்டம் வெற்றிபெற்றதால்
கைகொட்டி நாங்கள் வாய்விட்டுச்
சிரிப்போம்.
ஐயாவும் அம்மாவும் சேர்ந்து சிரிப்பர்.
சண்டை தீர்ந்து சமாதானம் நிலவும்.
அடுத்த சண்டையின் வரவுவரைக்கும்
குடும்ப விளக்கில் அழகு ஒளிரும்.

இங்கே பிள்ளைகள் நாங்கள் "Facilitaters"
சின்ன முரணைத் தீர்த்து வைக்கும்
சிறியவேலை.
அன்பின் நெருக்கம் ஆழ்மனக் கொதிப்பில்
நின்று எழுகையில்..
பொறிதட்டி வைத்தால் இதற்குப் போதும்.

பல உயிர் குடித்த பரம்பரை மோதலில்
ஒருவர் நலனில் ஒருவர்க்கெங்கே அக்கறை
உண்டு?
நீதியைக் கொன்ற, அநீதியின் ஆட்சியில்
அன்பும் அறநெறிப் பண்புகள் யாவும்
பாடையில் படுப்பதே சாத்தியம்.
சிறு இனம் விழுங்கிப் பெரு இனம் பெருக்க
சட்டம் சாத்திரம் பொய்மைச் சரித்திரம்
படைப்போர் மனத்தில்
ஈரம் என்பதற்கிடமே இல்லை.
அல்லவை போக்கி நல்லதை விதைக்க
விளையார் மத்தியில்
Facilitaion சாத்தியப்படுமா?
பல பத்தாண்டு நின்று எரிகின்ற பிரச்சினை
ஏய்க்கும் போக்கை கொண்டோர் மனதில்
நீதிதேவன்
குடிகொள்வதெப்படி?
உள்நாட்டுப் பிரச்சினை என்பதெல்லாம்
பம்மாத்துப் பேச்சு.
பாதிக்கும் சிறு இனம் கேட்பதெல்லாம் "நீதி
வேண்டும்"

"போத்திலில்" சாயும் விதானைமார் பார்த்து
சரிப்பட முடியா சிக்கல்ப் பிரச்சினை
அதனால்.. நீதிமான் வேண்டும்.
நீதித் தராசை நிறுத்திவைத்து
சரிபிழை எடுத்துத் தட்டில் வைத்து
உலகச் சரித்திரம் சட்டம் விரித்து.. நாதி
சொன்னால் சிக்கல் தீரும்.
நீதியைக் கேட்க அநீதியைத் திணிக்கும்
ஆண்டான் அடிமைக் கொள்கை
கொண்டோர்.
நீதிமான் முன்னால் நின்றால் மட்டுமே
தீர்வேதும் உண்டு.
"Mediation" னே இதற்கு உகந்தது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




'அக்கா'...

திடுக்கிட்டு விழித்தான், சின்னவளின் குரல், நெஞ்சு வலித்து பரிதவித்தது. எல்லாம் வெறும் பிரமை என்று தெரிந்ததும் வெறுமை சூழ்ந்தது. எட்டிப்பார்த்தான் இரண்டும் சுவாலை விட்டெரிந்தது. அந்தத் தீயுக்குள் தானும் எரிந்து கலந்துவிட வேண்டும் போல் உணர்வு எழுந்து நெஞ்சை வருத்தியது.

கடவுளே என்ன மனித வாழ்க்கை இது. இந்த காட்டுக்கை கண்ணுக்கு முன்னுக்கு உதிராயிருந்த இரண்டு பிள்ளையளும் கருகிறதை பாத்தபடி ஒரு மனுசன் எப்பிடி வாழுறது. முடியாதென தலை அசைந்தது. முகம் வெறுப்பில் பற்றி எரிந்தது! திரும்பவும் கண்களை மூடிக்கொண்டான். இருட்டும் நிசப்தமும் அவனைச்சுற்றி சூழ்ந்து அழுத்தியது.

இன்றைக்கு காலையில் கூட உணவூட்டிவிட்டதை நினைக்க நடுங்கியது. சின்னவளின் கதைகளை, கண்ணசைவுகளை அவள் பழகி எல்லாவற்றையும் போல் இடையில் நின்று போன பரதத்தின் அபிநயங்களை பார்த்து பிரவசித்தபடி ஒவவொரு வாயாக..... இதுக்காகத்தான் முன்பொரு தடவை வீட்டில் சண்டையே நடந்தது. அவள் அழுதது, அவனோடு வீடே துடித்தது எல்லாமே.

"விஜிதா, டான்சில காட்டிற இன்ரெஸ்ரில் கொஞ்சமாவது படிப்பிலையும் காட்ட வேணும், இல்லாட்டி பிறகு கவலைப்படவேண்டி வரும்" வகுப்பாசிரியைதான் சொன்னாள். கேட்ட நேரம் தொடக்கம் அவனுக்கு உடல் பதறத் தொடங்கியது.

செல்லம் அளவுக்கு அதிகமாயிட்டுது, முதலில் அதைக் குறைக்கவேணும் என தனக்குள் சொல்லிக்கொண்டான். வீட்டுக்கு வந்து சின்னவளை கண்டதும் எரிந்து விழுந்தான்.

"ஆட்டத்தை விட்டுட்டு ஒழுங்கா படி, இனி ஆட்டம் பாட்டமெண்டு திரியிறதை கண்டா....."

தந்தையின் புதிய கோலங்கண்டு அவள் முகம் வாடிப்போனது. கண்கள் கலங்கி விம்மினாள். அவள் மனம் சோர்ந்து போனது. இரவு சின்னவளுக்கு மேல் அனலாய் காய்ந்தது. இடைக்கிடை திடுக்கிட்டு விம்மினாள். பின் தூங்கினாள்.

தாய் ஒரு மூலையில் விழித்திருந்தழுதாள். அவனும் இடிந்துபோய் இருந்தான். அக்கா மட்டும் தலைமாட்டில் இருந்தாள். அடிக்கடி தொட்டுப் பார்த்தாள், பின்பு விம்மி அழுதாள். விடியும் வரை ஒருவருக்கும் தூக்கமில்லை.

வீடு சோகமாய் இருப்பது சின்னவளுக்கு பிடிப்பதில்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்றும் பிடிக்கவில்லை. அப்பாவிடம் வந்து சாய்ந்திருந்தாள். உணவு ஊட்டச் சொல்லி கெஞ்சினாள். வீடு முழுவதும் ஆட்டமும் பாட்டமுமாகத் திரிந்தாள். தன் அக்காவை அடிக்கடி சீண்டினாள்.

சின்னவளுக்கு அக்கா என்றால் உயிர். இரண்டும் ஒன்றில் ஒன்று சீவனை விடும் தாய் கூட சில நேரங்களில் சினப்பாள்.

"என்னடி, நீங்கள் ரெண்டு பேரும் சகோதரியளோ, மச்சான்மாரோ" தாயின் குரல் கேட்டு வழமைபோல பெரியவள் மட்டும் சாதுவாக சிரிப்பாள். அவளுக்கும் தான் என்ன வயது; இந்த வருடம் தான் பதினைந்து முடிந்து பதினாறு தொடங்குகிறது. அவளுக்கு இரண்டு வயது சிறியவள் சின்னவள்.

இரண்டு பேரும் தங்கள் தங்கள் சைக்கிள்களில் முற்றத்தில் வட்டமிட்டு 'அம்மா, போட்டு வாறம்' என்றபடி வெண்சிட்டுகளாய் பள்ளிக்கு சிறகசைக்கையில் தாயின் உள்ளம் குளிரும்.

மறையும் வரை வீதியில் நின்று பார்ப்பாள். ஆற்றையும் கண்படப்போகுது என மனம் பயப்படும். சாமி படத்துக்கு முன் போய் கை குவித்து விபூதியை அள்ளி நெற்றியில் அப்புவாள்.

இந்த இழப்பை என்னென்று இவள் தாங்கி வாழப்போகிறாள். அவளுடைய உலக வாழ்க்கை எல்லாமாய் இருந்த இரண்டையும் ஒன்றாகக் கெடுத்துவிட்டு....

மனைவியைத் திரும்பிப் பார்த்தான். அவள் தூக்கத்திலும் அனுங்கிக் கொண்டிருந்தாள். நெற்றியில் தொட்டுப் பார்க்கவேண்டும் போலிருந்தது. அது அவளுக்கு ஆறுதலாக கூட இருக்கும். ஆனால் பயமாக இருந்தது. விழித்தாள் அழுவாள்; என்ன செய்வது இனி விழித்திருக்கும் நேரமெல்லாம் அழத்தான் போகிறாள்.

வெறும் தரைதான் படுக்கை. பகல் வெயிலை வாங்கி கொதித்துப் போயிருந்த நிலம் சூடாறத்தொடங்கிய பின்னிரவு. காற்று குளிர்ந்தது. தேகம் நடுங்கிக் குடங்கியது.

'சே ஒரு போர்வைகூட இல்லை. அந்த நேரத்தில இதெல்லாத்தையும் ஆரால நினைக்க முடியும். கடவுளே...! ஊரில எவ்வளவு நிம்மதியா வாழ்ந்தநாங்கள்' அவன் நினைவுகளில் மூழ்கிப் போனான்.

கண்களை மூடித் திறப்பதற்கிடையில் லட்சக்கணக்கான சனம் தம் வாழிடத்தைவிட்டு எப்படிப்



பிரிந்தார்கள். வாழ்வின் இருப்பை அதன் அர்த்தத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஆவேசம் ஓட்டம். அவனைப் பொறுத்தவரை வாழ்வு அற்புதமானது. அதை இழந்துவிட அவன் ஒருபோதும் விரும்பான்.

மீசாலையில் தெரிந்தவரொருவரின் வளவில் சிறு கொட்டில், நாலு பேருமாக ஓரளவு வீட்டுப் பொருட்களை கொண்டு வந்திருந்தனர். பிறகும் இரண்டுதரம் அவன் தனியாகப்போய் வந்ததில் கொட்டிலின் முக்கால் பகுதி நிறைந்திருந்தது.

ஊரோடொத்து கஸ்டமும் துன்பமும் அவதியும் அந்தரமும் அவர்களுக்கும் பொதுவானதுதான். ஆனால் அதுவும் ஓர் அனுபவமாதலால் அவனுக்குள் ஓர் திருப்தியும் இருந்தது. 'என்ர பிள்ளையள் இனி எந்தத் துன்பம் வந்தாலும் தாங்கிக்கொள்ளுங்கள்' என்ற எண்ணம் நெஞ்சத்தில் நிறைந்திருந்தது.

அந்த வாழ்க்கையிலும் திடீரென ஒருநாள் இடிவிழுந்தது.

"ஊருக்கை பூந்திட்டாங்களாம்.... ஓடுங்கோ ஓடுங்கோ...." இதே குரல் பல பக்கங்களிலிருந்தும்....

கையில் கிடைத்தவற்றை எடுத்தபடி மனைவி பிள்ளைகளை இழுத்துக்கொண்டு கடற்கரைக்கு வந்து சேர்ந்தபோது மதியமாகியிருந்தது.

அனல் பறக்கும் வெயில் முண்டியடித்துக் கொண்டு மனித வெள்ளம் அவலம்; ஒரு மனிதன் தன் வாழ்நாளில் சந்திக்கக்கூடாத அவலம்.

அவனைப் போல் ஆயிரம் ஆயிரம் பேர் துரத்திவரும் பேய்களின் கைகளில் சிக்காமல் தப்பிவிடவேண்டுமென ஓடிவந்த அவர்களை தடுத்தது கடல்.

பசி, தொண்டைகாய்ந்து போன தாகம், நெஞ்சத்தை அதிரவைக்கும் எறிகணைகளின் வெடிப்பதிர்வு, பேரொலியுடன் வானத்தை கிழித்து குண்டுகளை வீசும் விமானங்கள்.... எங்கும் ஓலம், இரத்தம் கண்ணீர்...

கடவுளே! ஒரேதரம் ஒரே தரம் மட்டும் இந்தக்கடல் பிரிந்து வழிவிடாதா என்ற ஏக்கம். தப்பிப் போய்விடவேண்டும் என்ற தவிப்பு. முடியாதோ என்ற நினைப்பில் எழுந்த அந்தரம்.

மணலில் பரவியிருந்த இரத்தத்தில் புதைந்து, சிதறிய உடல்களை கடந்து மனைவி பிள்ளைகளையும் இழுத்து வந்து படகில் ஏறிய பின்பு அவள் அழத்தொடங்கினாள். பெரிதாக கேவிக் கேவி இரக்கப்படும்படியாக அழுதாள்.

மனிதர்களின் சுமையுடன் அவர்களின் மனங்களின் சுமைகளையும் சுமந்தபடி படகுகள் தள்ளாடித் தள்ளாடி நகர்ந்தன. அந்தச் சிறு கடல் இந்த மக்களின் வாழ்வில்தான் எத்தனை அவலங்களை விளைவித்துவிட்டது.

திருவையாற்று தொங்கலில் ஒரு சிறு கொட்டில், இருபைகளில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டு வந்த உடுப்புகள் மட்டுந்தான் சொத்து. அன்றாடத்தேவைகளுக்காக கழுத்து கைகளிலிருந்தவை ஒவ்வொன்றாகக் கழன்றன.

உயர்ந்து வளர்ந்த கறுத்துப் பெருத்த அரக்கனொருவன் அகன்ற மீசை, மீசையை துருத்திக்கொண்டு நீண்டு வளைந்த கோரப்பற்கள். அந்த உருவம் அவனை நெருங்கி ஆக்கிரமிக்கும்.

அவன் கெஞ்சுவான் தன்னை விட்டுவிடும்படி மன்றாடுவான். ஆனாலும் அது அவனை விழுத்தி நெஞ்சில் கால்களை வைத்து செத்துப்போகக்கூடியவாறு அழுத்தும்.

அந்த நேரமெல்லாம் சின்னவள்தான் ஓடிவந்து எட்டி உதைப்பாள். அரக்கனை வீழ்த்தி தோள் கொடுத்துத் தூக்குவாள். துன்பங்களையும் துயரங்களையும் அலட்சியமாக காலால் எட்டி உதைக்கும் துணிவை அவளுக்கு தந்தது யார்?

அவனுக்கு பதில் பிடிபடுவதில்லை.

கடவுளே, இப்படி நடக்குமென்று தெரிந்திருந்தால் அங்கிருந்து அவன் விலகியே இருக்கமாட்டான்.

எறிகணைகள் விழுந்து வெடித்து காதை செவிபடுத்திக்கொண்டிருந்த போதும் எழும்புவதாக அவன் எண்ணவில்லை. பக்கத்துக்காணிக்காரன்தான் குழம்பினான்.

“அண்ணை, அக்கம் பக்கத்துச் சனமெல்லாம் ஓடிட்டுது நீ தனிய நிண்டு என்ன செய்யப்போறா, உதுகளைப் பலி கொடுக்கப் போறியே செத்தாலும் புதைக்கிறதுக்கும் ஆளில்லை”

அதற்குப் பிறகு அங்கிருக்க மனமில்லை. முறிகண்டியில் மரநிழலொன்றின் கீழ் வாழ்க்கையின் தொடர்ச்சி. அது பரவாயில்லை சனம் முழுக்க காடுகளில் பற்றைக் கூடல்களை குடைந்து குடியிருந்தனர். குளிப்பில்லை, முகம் கழுவக்கூட தண்ணியில்லை. இந்தச் சனத்துக்கு மட்டும் வாழ்வின் பக்கங்களில் துயரம் மட்டும் தான் என்பது எழுத்தாகப் போய்விட்டது.

இப்போதும் அந்த அரக்கன் முன்பைவிட இன்னும் மூர்க்கமாக வருவான். இப்போதெல்லாம் அவன் கூட ஓரளவு துணிவோடு இருந்தான். இல்லாவிட்டாலும் என்ன பிள்ளைகளும் இருக்கிறார்கள், அடித்து விரட்டி விடலாம், என்ன சொன்னாலும் சின்னவள் வீரிதான்.



சின்னவள் இருக்கும் வரைக்கும் என்னை எந்த அரக்கனாலையும் ஒன்றும் செய்யமுடியாது என்ற திமிருடன் அவன் நெஞ்சு நிமிர்ந்தான்.

‘கடவுளே இந்த வாழ்க்கையில ஏன் மண்ணை அள்ளிப் போட்டாய்; குருவிக் கூட்டை குரங்கு பிச்செறியிறமாதிரி...

அந்த நினைவுதான் மீண்டும் மீண்டும் நெஞ்சில் மோதியது. வருத்தி வருத்தி துடிக்க வைத்தது.

“அப்பா இஞ்சை தான் சுத்துறான் ஓடியாங்கோ”

“அம்மா கிணத்தடியில் பிள்ளை, ஓடிப்போய் கூட்டியாறன் நேற்றும் கிணத்தடிக்குத்தான் அடிச்சவன்”

அவன் ஓடினான்.

“குத்திப்போட்டான் படுங்கோ படுங்கோ”

இதயத்தை அதிரவைத்த வெடியோசை. குப்பென எழுந்து படர்ந்த புகைமண்டலம். அந்த மரம்தான்... கத்திக் கதறிக்கொண்டு ஓடிப்போய் பார்த்தான்.

முறிந்த மரங்கள் இலைகள் சிதறல்களுக்கு நடுவே அவனது குஞ்சுகள் இரண்டும்...

எரிந்து கொண்டிருந்த விறகு படபடத்தது. தீ பற்றி எரிந்தது. சுவாலை பெரிதாக எழுந்து வான்தொட எட்டி ஆடியது; சின்னவள் ஆடுறமாதிரி மனம் கொதித்தது. கண்களை மூட முயன்று தோற்றான். அயர்ந்தபோது அந்த அரக்கன் வந்தான்; வான் முட்ட எழுந்து விஸ்வரூபம் எடுத்து அகன்ற கைகள் அவன் கழுத்தை பிடித்து நெரித்துத் தள்ளியது. திகைத்து விழுந்தவன் நெஞ்சில் கால்களை வைத்து அவ்வரக்கன் அழுத்தினான். எதிர்க்க அவனுக்கு வலுவில்லை. கைகள் சோர்ந்து விழுந்தன.

மூச்சுத் திணறியது. தொண்டை வரை வந்த குரல் வெளிவரவில்லை. இந்தப் பிறவியின் முடிவு இதுதான் என்றபோது அலட்சியமானதொரு வெறுப்புணர்வு எழுந்து நெஞ்சை அடைத்தது.

சரி இறுதியாக அரக்கன் வென்று விட்டான். “ஐயா எழும்புங்கோ, இந்தாங்கோ சாப்பாடு சாப்பிடுங்கோ” திடுக்கிட்டு விழித்து நிமிர்ந்து பார்த்தான்.

சின்னவள், இல்லை இல்லை சின்னவள்கள். களைத்த முகங்கள், கலைந்த கேசம் சீருடைக்குள் அவர்கள் கைகளில் துப்பாக்கிகள்.

அரக்கன் இந்த முறையும் வெல்லவில்லை. அந்த அரக்கன் சிறுத்து ஒரு புழுப்போல மாறி, அவன் கால் பெருவிரலுக்குள் நெரிபட்டுக் கிடந்தான்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net



அச்சுப்பதிப்பு வாசன் அச்சகம் 0181 646 2885

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்